# உதயன்

பக்கங்கள் - 20 விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 :30 ட்டாதி 19 ஆம் நாள் திங்கட்கிழமை 05 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051




முச்சந்தி முரளி

“மறுபடியும் முதல்ல இருந்தா ? இன்னொரு லொக் டவுனை தாங்குமோ இலங்கை ?”

# தொற்றாளர்கள் அதிகரித்தால் நாடு முடங்கும்



## மக்களே மிகவும் அவதானம்; இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 5

சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்தால் நாடு முழுவதும் மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படும். எனவே, நாட்டு மக்கள் கொரோனாத் தடுப்புக்கான சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றி மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இவ்வாறு கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய 18

## நீண்ட நாள்களுக்குப் பின் சமூகத்தில் கொரோனா!

கொழும்பு, ஒக். 5

கம்பஹா மாவட்டம், திவுலப்பிட்டியப் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து அவரின் 16 வயது மகளுக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறு 18

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- திவுலபிடிய, மினுவங்கொட, வெயாங்கோட பிரதேசங்களில் மறுஅறிவித்தல் வரும் வரை ஊரடங்கு.
- நாடு முழுவதிலும் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கு இன்று தொடக்கம் இரண்டாம் தவணை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதிலும் முன் பள்ளிகள் இன்று முதல் மூடப்படும்.
- கம்பஹா மற்றும் கொழும்பில் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் மூடப்படும்.
- களனி பல்கலைக்கழகம் மற்றும் விக்ரமாராச்சி ஆயுள்வேத மருத்துவ கல்லூரி, நைவல உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவன ங்களுக்கு ஒருவாரத்துக்கு விடுமுறை.
- மகர மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலை கைதிகளை பார்வையிடுவது இடைநிறுத்தம்.
- கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளை வழியனுப்ப வருபவர்கள் தற்காலிகமாக அனுமதிக்கப்படாததுடன், பொது மக்கள் முனையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
- அனைத்து தனியார் மற்றும் இ.போ.ச பேருந்துகளும் ஆசனங்களுக்கு அளவான பயணிகளை மட்டுமே ஏற்ற வேண்டுமென்ற நடைமுறை உடனடியாக அமுல்.
- இன்று சகல மாவட்டங்களிலும் பொதுமக்கள் தினம் இடம் பெறாது.
- திவுலபிடிய மற்றும் மினுவங்கொட பிரதேசங்களில் விடுமுறையில் சென்றுள்ள முப்படை யினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படைப் பிரிவைச் சேர்ந்தவர்களை மீள் அறிவித்தல் வரை சேவைகளுக்கு திரும்ப வேண்டாம் என்று அறிவுறுத்தல். (ஒ,5)

### பரீட்சைகள் பிற்போடுவது தொடர்பில் எந்தத் தீர்மானமும் இதுவரை இல்லை

*பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு*

கொழும்பு, ஒக். 5

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றைப் பிற்போடுவது தொடர்பில் இதுவரை எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. மாணவர்களின் 19

தொற்று எப்படி ஏற்பட்டது?

### வழி வரைபடம் இன்னும் கண்டறியப்படவில்லை

கொழும்பு, ஒக். 5

கம்பஹா, திவுலப்பிட்டியப் பகுதியில் குடும்பப் பெண்ணுக்கு கொரோனா வைரஸ் எவ்வாறு தொற்றியது என்பது தொடர்பில் சுகாதாரப் பிரிவினரும் கொரோனா 19

நோய்த் தொற்று அறிகுறி

### தொழிற்சாலை ஊழியர்கள் 6 பேர் மருத்துவமனையில்

கொழும்பு, ஒக். 5

திவுலப்பிட்டிய பெண் தொழில்புரிந்த தொழிற்சாலையில் பணியாற்றிய 6 ஊழியர்கள் உட்பட 20 பேர் நீர்கொழும்பு மருத்துவமனையில் 19

### மாதகலில் 15பேர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், ஒக். 5

கம்பஹாவில் கொரோனாத் தொற்றுடன் இனம் காணப்பட்ட பெண்ணுடன் தொடர்புடைய 15 பேர் யாழ்ப்பாணம் மாதகல் ஜம்புகோளப் 19

### புங்குடுதீவிலும் பெரும் பீதி 22பேர் சுயதனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், ஒக். 5

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் குடும்பப் பெண் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அங்கு பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்கள் இருவரும், அவர்களுடன் 19

### கம்பஹா தொழிற்சாலையில் புங்குடுதீவு பெண்கள் 7பேர்

யாழ்ப்பாணம், ஒக். 5

கம்பஹா ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண்ணுடன் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த 7 பெண்கள், அங்கு தனிமைப்படுத்தப்பட் 19

### 1,300 பேருக்கு இன்று பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, ஒக். 5

திவுலப்பிட்டிய பெண் பணியாற்றிய தொழிற்சாலையில் வேலை செய்யும் சுமார் ஆயிரத்து 300 பேருக்கு இன்று பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. 19

### கடைகளில் குவியும் மக்கள்



கொழும்பு, ஒக். 5

நாட்டிலுள்ள பூட் சிற்றிகள், மருந்தகங்கள், எரிபொருள் விற்பனை நிலையங்கள், மதுபான விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் நேற்றுக் காலையிலிருந்தே மக்கள் குவியத் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டம் 19

தமிழரின் அபிலாசைகள் பூர்த்தியாக

## இந்திய அரசின் வெளியுறவு கொள்கை மாற வேண்டும்

### விக்னேஸ்வரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 5

இலங்கை தொடர்பாக இந்திய வெளியுறவு கொள்கையில் ஏற்படக்கூடிய மாற்றமே இலங்கையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதில் இந்தியாவின் வகிபாகம் எப்படி இருக்கப்போகின்றது என்பதையும் தென் கோடியில் இந்தியாவின் பாதுகாப்பையும் உறுதிசெய்யப்போகின்றது. இந்தியா எத்தகைய நல்லெண்ண செயற்பாடுகளைச் செய்தாலும், எத்தனை கடன் உதவிகள் மற்றும் சலுகைகளை 18

### கொரோனா விவகாரம் ஆளுங்கட்சியின் விசேட கூட்டம்

கொழும்பு, ஒக். 5

ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு 19

### புலிச் சின்னத்தையும் விடாத இராணுவம்

யாழ்ப்பாணம், ஒக். 5

வல்வெட்டித்துறையில் இடம்பெறும் வல்வை உதைபந்தாட்ட பிரிமியர் லீக் தொடரின் நேற்றைய முதல் நாள் ஆரம்ப நிகழ்வில் 19

### சித்தன்கேணியில் 10 பவுண் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 5

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டு, வடக்கு சித்தன்கேணிப் பகுதியில் வீட்டிலிருந்து 10 பவுண் 19

### மீனவரின் சடலம் கரையொதுங்கியது


யாழ்ப்பாணம், ஒக். 5

அல்லைப்பிட்டி வெண்புறவிநகர் கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று கரையொதுங்கியுள்ளது.

கடந்த மாதம் 30ஆம் திகதி 19

# மக்கள் தேவையற்று ஒன்றுகூட வேண்டாம்

## யாழ். மாவட்டச் செயலர் அறிவிப்பு



**யாழ்ப்பாணம், ஒக்.5**
**யாழ். குடாநாட்டு மக்கள் கொரோனா சமூகத்தொற்றுத் தொடர்பாக விழிப்புடன் செயற்படுங்கள் எனவும், பொது இடங்களில் அதிகளவில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்து பாது காப்பு நடைமுறைகளைப் பின்பற்றுங்கள் எனவும் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.**

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் - 19 நிலைமை தொடர்பில் யாழ். குடாநாட்டு மக்களுக்கு விடுத் துள்ள அவசர அறிவித்தலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள் ளார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடு பூராகவும் சுகாதார அமைச்சு, கொரோனா தடுப்புச் செயலணி ஆகியவற்றால் கொரோனாத் தொற் றைத் தடுக்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ். மாவட்ட மக்கள் அவதானமாகச் செயற்பட்டு தங்களைத் தாங்களாகவே பாது காத்துக்கொள்ள முன்வரவேண்டும். அநாவசியமற்ற நடமாட்டங்களைத் தவித்து வீடுகளில் இருப்பதோடு வீதிகளில் பயணிக்கும் போது முகக் கவசங்களை அணிந்து, சமூக இடை வெளியைப் பேணுவதன் மூலம் கொரோனாத் தொற்றிலிருந்து தங்க ளைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். கொரோனா எந்த உருவில் எங்கே, எப்போது தொற்றும் என யாருக்கும் தெரியாது. எனவே இந்தத் தொற்றி லிருந்து மக்கள் தங்களைப் பாதுகாப் பதற்கு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.

மேலும், புங்குடுதீவுப் பகுதிக்கு மினுவாங்கொட பகுதியில் இருந்து வருகை தந்தோர் தொடர்பில் சுகா தாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப் புப் பிரிவினரால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் தங்களைப் பாதுகாப்ப தற்குரிய நடவடிக்கைகளை தாங்க ளாகவே முன்னெடுக்க வேண்டும். பொது இடங்கள் மற்றும் வியா பார நிலையங்களில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்க வேண் டும். அலுவலகங்கள் வழமைபோல் செயற்படும். எனினும் பொதுமக்கள் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சேவை களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ப-20)

---

கொரோனா அபாயம்;

# சுகாதார நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுங்கள்

## யாழ்.மக்களிடம் வேண்டுகிறார் பொலிஸ் பெறுப்பதிகாரி

யாழ்ப்பாணம், ஒக்.5
சுகாதார நடைமுறைக ளைப் பின்பற்றிச் செயற்படுமாறு யாழ்ப் பாணக் குடாநாட்டு மக் களை யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி பிரசாத் பெர் னாண்டோ கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி தலைமையிலான பொலிஸார் தற்பொ முது நாட்டில் ஏற்பட் டுள்ள கொரோனா அச்சநிலை தொடர்பில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று பொதுமக்க ளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்பாட் டில் ஈடுபட்டனர். இதன் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

மினுவாங்கொட பகுதி யில் ஆடைத் தொழிற் சாலையொன்றில் கடைமையாற்றுபவ ருக்கு கொரோனாத் தொற்று இனங்காணப் பட்டுள்ளது. அந்த ஆடைத் தொழிற்சா லையில் பணியாற்றிய இருவர் யாழ்ப்பாணத் திற்கு வந்துள்ளனர். அவர்கள் தொடர்பில், வர்களோடு தொடர்புபட் டவர்களைத் தனிமைப் படுத்துவதற்குரிய நடவ டிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெ டுத்து வருகின்றார்கள். எனினும் மக்கள் கொரோனாவில் இருந்து தம்மைப் பாது காத்துக் கொள்வதற்கு சுகாதார நடைமுறைக ளைப் பின்பற்றி பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். யாழ். குடா நாட்டில் ஊரடங்குச் சட்டம் மற்றும் முடக்கம் ஏற்பட்டால் பொதுமக் கள்தான் பாதிக்கப்படு வார்கள். எனவே அதற்கு முன்னேற்பா டாகப் பொதுமக்கள் சுகாதார நடைமுறைக ளைப் பின்பற்றி கொரோனாத் தொற்று ஏற்படாதவாறு தங் களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக வீடுகளை விட்டு வெளியில் வரும் போது முகக் கவசங் களை அணிந்து கைக ளை நன்றாகக் கழுவி சமூக இடைவெளியைப் பின்பற்றுவதன்மூலம் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தங்க ளைப் பாதுகாத்துக்கொ ள்ள முடியும். தனியார் மற்றும் அரச பேருந்துக ளின் சாரதிகள், மற்றும் நடத்துநர்கள், பேருந்துக ளில் இருக்கை மட்டத் திற்குப் பயணிகளை ஏற் றவேண்டும். என்றார். (ப-111)



---

# தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஒக்.5
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் மரத்தில் தொங்கிய நிலையில், இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த கணேசமூர்த்தி விதுசன் (வயது -19) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், சம்பவம் தற்கொலையா? கொலையா? என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவித்தனர். (ப-316)

---

# கைதான விவசாயிகள் பிணையில் விடுதலை

கிளிநொச்சி, ஒக்.5
வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட இயக்கச்சியைச் சேர்ந்த 12 விவசாயிகள் கிளிநொச்சி நீதிவான் மன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இயக்கச்சி கோவில்வயல் பகுதியில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலரால் வழங்கப்பட்ட காணி உரித்து ஆவணங்களுடன் நேற்றுமுன்தினம் நெல் விதைப்பில் ஈடுபட்டிருந்த 12 விவசாயிகளை, தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் அத்துமீறினர் என்ற குற்றச்சாட்டில் சுண்டிக்குளம் வனஜீவரா சிகள் திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். கைதான விவசாயிகள் பொலிஸாரால் நேற்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண் ணன் முன்னிலையானார்.

12 விவசாயிகளுக்கும் மீள்குடியமர்வின் பின்னர் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட காணி அனு மதிப்பத்திரத்தைக் காண்பித்து அவர்கள் அதன டிப்படையிலேயே அங்கு நெற்செய்கைக்குத் தயாராகினர் என்று சட்டத்தரணி மணிவண்ணன் மன்றுரைத்தார். விவசாயிகள் சார்பான விண் ணப்பத்தை ஆராய்ந்த மன்று அவர்கள் 12 பேரையும் பிணையில் விடுவித்தது. (ப-26)

(முன்னர் வந்த செய்தி 9ஆம் பக்கத்தில்)

---

# முகக் கவசம் இல்லையேல் இன்றுமுதல் சட்டம் பாயும்

## வவுனியா பொலிஸார் எச்சரிக்கை

வுனியா, ஒக்.5
கொரோனாத் தொற்று சமூக மட்டத்தில் இனங்காணப் பட்டுள்ள நிலையில், வவுனியாவில் உள்ள மக்கள், வெளியில் நடமாடும்போது முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளிகளைக் கடைப்பிடிப்பது கட்டாயமாக் கப்பட்டுள்ளது என்று தெரிவித்த வவுனியா பொலி ஸார், அதை மீறுபவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் அறிவித்தனர். நாட்டின் சில பாகங் களில் கொவிட்-19 இன் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், வவுனியா பொலிஸார் இந்த அறிவித் தலை விடுத்துள்ளனர்.

"வவுனியா மாவட்டத்தில் கொவிட்- 19 சுகாதார நடை முறையை இன்றுமுதல் பொதுமக்கள், வர்த்தகநிலை யங்கள் பின்பற்ற வேண்டும். குறிப்பாக பொதுமக்கள் அனைவருக்கும் சமூக இடைவெளியைப் பேணுவது, முகக்கவசம் அணிவது என்பன கட்டாயமாக்கப்பட் டுள்ளதுடன் இதனை மீறுபவர்கள்மீது சட்டநடவ டிக்கை எடுக்கப்படும்" என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப-18)

---

# மன்னார் மக்களே! விழிப்புடன் இருங்கள்

## மன்னார் பதில் மாவட்டச் செயலர் வேண்டுகோள்

மன்னார், ஒக் 5
நாட்டில் மீண்டும் கொரோனா அச் சம் தலைதூக்கியுள்ளதால், மன் னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக் களை விழிப்புடன் செயற்படுமாறு, மன்னார் பதில் மாவட்டச் செயலா ளர் சிவபாலன் குணபாலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மீண்டும் நாட்டின் பல பாகங்களி லும் கொரோனாத் தொற்று ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. இத னால், சுகாதாரத் துறையினர் பல வழிகளிலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். மன்னார் மாவட்ட மக்கள் கொரோனா தொடர் பான எச்சரிக்கை மற்றும் விழிப்புணர்வோடு செயற்பட வேண் டும். தொற்று ஏற்பட்ட ஆரம்ப நாள் களில் எவ்வாறு சமூக இடைவெளி களையும் சுய கட்டுப்பாடுகளையும் கடைப்பிடித்து, கொரோனா அச்சம் இல்லாத மாவட்டமாக எமது மாவட் டம் இருப்பதற்கு மக்கள் ஒத்து ழைப்பு வழங்கினார்களோ அதே ஒத்துழைப்பை மீண்டும் வழங்க வேண்டும். பயணங்களையும், மக் கள் ஒன்றுகூடுவதையும் தவிர்த்து சமூக இடைவெளிகளைப் பேணி முகக் கவசங்களை அணிந்து தொற்று நீக்கிகளால் கைகளைக் கழுவி கொரோனா அச்சம் இல்லாத மாவட்டமாக மன்னார் மாவட்டம் இருப்பதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ப-213)

# மீண்டும் இறுக்கமான சுகாதார நடைமுறை!!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு



**கொரோனா வைரஸை ஒழிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். அதற்குத் தேவையான அதிஉச்ச ஒத்துழைப்பை வழங்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்' என்று சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.**

கொழும்பு, ஒக். 5

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதுதொடர்பில் கருத்துவெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசால் வழங்கப்பட்ட சுகாதார ஆலோசனைகளை மக்கள் உரிய வகையில் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்கியதாலேயே கடந்த காலங்களில் கொரோனா சமூகத்தொற்றை எம்மால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது. இந்நிலையில் தற்போது ஒரு தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

எனவே, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுங்கள். அதேபோல் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட சுகாதார நடைமுறைகள் நிச்சயம் நிறுவனங்களில் கடைப்பிடிக்கப்படவேண்டும். அவ்வாறு அவை பின்பற்றப்படுகின்றனவா என்பது கண்காணிக்கப்படும்.

நோய் அறிகுறிகள் இருந்தால் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு செல்லுங்கள். பொதுவெளியில் நடைபெறும் நிகழ்வுகளை தவிர்த்துக்கொள்ளவும்' - என்றார். (ம-44)

# தெய்வீக நிகழ்வு

மன்னார், ஒக்.5

இந்து சமய கலாசார அலுவல்கள் திணை க்களத்தின் அனுசரணையுடன் மாந்தை மேற்குப் பிரதேச செயலகம் நடத்திய தெய்வீக கிராம நிகழ்வு நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் மன்னார் ஆண்டான்குளம் பாடசாலையில் நடைபெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர் சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் கலந்துகொண்டார்.

ஆண்டான்குளம் நாகம்மா ஆலயத்தில் விசேட பூசையுடன் ஆலயத்திலிருந்து பேரணியாக வந்து மன்னார் ஆண்டான்குளம் றோமன். கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வின் திருக்கேதீச்சர திருத்தலத்தின் பிரதம சிவாச்சாரியார் கருணானந்த குருக்கள், மன்னார் அன்னை இல்ல பொறுப்பாளர் பிருந்தாவனநாதன் மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் அறநெறி மற்றும் மாணவர்கள் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-213)

# அவதானம் அவசியம்

## இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.5

நாட்டில் கொரோனாவைக் கட்டுப்படுத்தியுள்ளமையால் அந்த வைரஸ் மீண்டும் வராது என்று அர்த்தம் இல்லை என்று தெரிவித்தார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா.

மினுவங்கொட பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கொரோனாப் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து சுமார் இரண்டு மாதங்களின் பின்னர் சமூகத் தொற்றாக கொரோனா உருவாகியுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பெரும் ஆபத்தானது. அதன் தீவிரத்தன்மை இலங்கையில் குறையவில்லை. உலகின் வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தற்போது கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். எத்தனை பாதுகாப்பு அடுக்குகளைத் தாண்டி அவரைக் கொரோனா தாக்கியிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். நாம் மிகவும் வெற்றிகரமாக கொரோனாத் தொற்றை இலங்கையில் கட்டுப்படுத்தியுள்ளோம். எனினும், கொரோனா மீண்டும் இங்கு வராது என்று அர்த்தம் கிடையாது. நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் தொடர்ச்சியாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும். இது அத்தியாவசியமாகவே கருதப்படுகிறது' என்றார். (ம-இ)

புங்குடுதீவில் பூசகர் கொலை;

# கைதான மூவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

புங்குடுதீவு ஊரதீவு பாணாவிடை சிவன் ஆலயப் பூசகர் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அவரது உதவியாளர் உள்ளிட்ட மூவரை வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சியைச் சேர்ந்த இராசையா இராசரூபசர்மா (வயது32) என்ற ஊரதீவு பாணாவிடை சிவன் கோவில் பூசகர் கொலைசெய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாரும் யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். சம்பவ இடத்தில் ஊர்காவற்றுறை நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி மயூரன் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். பூசகரின் பிடரியில் இரும்புக் கம்பியால் தாக்கியமையால் அவர் கொல்லப்பட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பூசகரின் உதவியாளரான விஸ்வமடுவைச் சேர்ந்த ஒருவர், மற்றும் சுழிபுரம் பாணாவெட்டையைச் சேர்ந்த ஆலய உதவியாளர்கள் இருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பூசகரின் வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சிசிரிவி கமரா பதிவின் காா்ட் டிஸ்ட் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டன. சந்தேக நபர்கள் மூவரும் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் மூவரையும் வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ப-26)

# பொருள்களைக் கொள்வனவுசெய்ய கொழும்பில் அலைமோதும் மக்கள்

கொழும்பு, ஒக். 5

இலங்கையில் கொரோனா சமூகத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய மக்கள் முண்டியடிக்கின்றனர் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கம்பஹா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து நாடுமுழுவதும் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டு, பல பகுதிகள் முடக்கப்பட்டுள்ள நிலையிலேயே மக்கள் இவ்வாறு அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய கடைகளில் குவியத் தொடங்கியுள்ளனர். (ம)

# நடிகர் திலகம் சிவாஜிக்கு யாழில் பிறந்தநாள் விழா

யாழ்ப்பாணம், ஒக்.5

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 92ஆவது பிறந்தநாள் விழா யாழ்ப்பாணம், சாந்தை, பண்டத்தரிப்பு பகுதியில் கடந்த வியாழக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. சிவகுரு தலைமையில் இடம்பெற்ற இந்தப் பிறந்தநாள் விழாவை, யாழ். விக்ரம்பிரவு ரசிகர் மன்றத்தினரும், சிவாஜி ரசிகர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், மக்களுக்கு பொங்கல், பால் பாயாசமும் வழங்கப்ப ட்டுள்ளன. அத்தோடு, சிவாஜி கணேசனின் மூத்த ரசிகர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ப)

# களனி பல்கலைக்கு ஒருவாரம் விடுமுறை

கொழும்பு, ஒக். 5

களனி பல்கலைகழகம் மற்றும் விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவனங்களுக்கு ஒரு வாரத்துக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று பல்கலைகழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இன்று முதல் குறித்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. உடனடியாக மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# ரயில் பயணத்திலும் சுகாதார நடைமுறை

கொவிட்-19 வைரஸ் தொற்று மீண்டும் சமூகமட்டத்தில் பரவலடைந்துள்ளதால் ரயிலில் பயணம் செய்வோர் அனைவரும் முன்பு பரிந்துரை செய்த பாதுகாப்பு சுகாதார நடைமுறைகளை மீண்டும் கட்டாயமாகக் கடைப்பிடிக்குமாறு ரயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் டிலந்த பெர்னான்டோ தெரிவித்தார்.

அதேநேரம் பொதுமக்கள் இது தொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (ப-இ)

# சைக்கிள் திருடனை மடக்கியது பொலிஸ் 15 சைக்கிள்கள் மீட்பு

கொடிகாமம் ஒக் 5

யாழ் மாவட்டத்தில் பல இடங்களில் திருடப்பட்ட 15 சைக்கிள்களுடன் ஒருவர் யாழ். குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம், சண்டிலிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி, மருதனார்மடம் ஆகிய இடங்களில் அவர், குறித்த 15 துவிச்சக்கரவண்டிகளைத் திருடினார் ... தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் ... யாழ். குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதி... ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆசிரியர் தின விழாவும் மின்சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக்.5
கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆசிரியர் தின விழாவும், 'கலாதீபம்' மின்சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு, கலாசாலையில் உள்ள ஜெகன்மோகினி மண்டபத்தில் இடம்பெறும்.

அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுகளில், கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலனும் , மக்கள் வங்கி யாழ். பிராந்திய தலைமை அலுவலகப் பிரதி முகாமையாளர் கலாவாணி குணசீலனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

கலாசாலையின் கலாதீபம் என்ற மாத மின்சஞ்சிகையின் (e-magazine) முதல் வெளியீடும் இன்று இடம்பெறும்.

யுனிசெப் அமைப்பின் வழிகாட்டலில், இவ்வாண்டு ஆசிரியர் தினம், "நெருக்கடிச் சூழலில் தலைமை தாங்குபவராகவும், எதிர்காலத்தை மீளக் கட்டமைப்பவராகவும் ஆசிரியர்" என்ற தொனிப்பொருளில் உலகெங்கும் முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (க)

# விழிப்புணர்வு நடை பயணம்




கிளிநொச்சி, ஒக்.5
**கிளிநொச்சி மாவட்ட சமூக அபிவிருத்திப் பேரவையின் ஏற்பாட்டில், சமூக விழிப்புணர்வு நடைபயணம் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.**

உடல் ஆரோக்கியத்துக்கும், சமூக விழிப்புணர்வுக்குமான நடைபயணம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்பாக ஆரம்பமாகி, மத்திய கல்லூரி வரை சுமார் 9.2 கிலோ மீற்றர் தூரம் இடம்பெற்றது.

சமூகத்தில் ஏற்பட்டுள்ள போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு, வீதி விபத்துக்களைத் தடுத்தல், சுத்தமான சூழலைப் பேணுதல் போன்ற சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நடைபயணம் இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபயணம் அடுத்த வாரம் கிளிநொச்சி இராமநாதபுரம் பாடசாலையில் ஆரம்பித்து, வட்டக்கச்சி மத்திய கல்லூரி வரை இடம்பெறும்.

நடைபயணத்தில், கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், யாழ்.பல்லைகழக கிளிநொச்சி வளாகங்களான தொழிநுட்ப பீடாதிபதி திருமதி சிவமதி, விவசாய பீட பீடாதிபதி சூரியகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன், யாழ். போதானா மருத்துவமனையின் பணிப்பாளாரும், கிளிநொச்சி சமூக அபிவிருத்திப் பேரவையின் இணைப்பாளருமான மருத்துவர். த. சத்தியமூர்த்தி மற்றும் மருத்துவர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்திருந்தனர். (க-214,-ரி2)

# 20 ஆவது திருத்தம் மக்களுக்கு நன்மையே

## எம்.பி மஸ்தான் தெரிவிப்பு

வவுனியா,ஒக்.5
20 ஆவது திருத்தத்தால் மக்களுக்கு நன்மை கிட்டும் செயற்பாடுகளை முன்னெடுப்போம் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக பல விமர்சனங்கள் வருகின்றன. அவ்வாறான விமர்சனங்களை ஒன்று திரட்டி, இலங்கை மக்களுக்கு நன்மை தரக்கூடிய வகையில் ஒரு திருத்தமாகவே இது இருக்கும். எனவே மக்களுக்குப் பாதிப்பு இல்லாததும், மக்களுக்கான விரைவான அபிவிருத்திகள், மக்களுக்கு அரசியல் மட்டத்திலோ அல்லது அதிகாரிகள் மட்டத்திலோ ஏற்படுகின்றபிரச்சனைகளைத் தீர்க்கின்ற விதத்திலே நல்லதொரு அரசமைப்புக் கிடைக்கும்.

அனைத்துத் தேர்தல்களிலும் இனவாதம் கக்கப்படும். ஆனால் இந்தத் தேர்தலில் மிகவும் வித்தியாசமாகவும், பலவிதமாகவும் இனவாதம் கக்கப்பட்டாலும் கூட, அதற்கு வன்னியில் இடமில்லை. நாட்டிலும் இடமில்லை என்று பெரும்பான்மைச் சமூகமும் காட்டியுள்ளது.

எதிர்காலத்தில் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நீங்கள் நல்ல விதத்தில் பயன்படுத்த வேண்டும். என்றார். (க-110)

# இரு பிள்ளைகளின் தாய் உயிர்மாய்ப்பு



மட்டக்களப்பு, ஒக்.5
மட்டக்களப்பு கோட்டமுனையைச் சேர்ந்த, பாடுமீன் வீதி, இளம் குடும்பப் பெண் தூக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டார்.

5 வயது மற்றும் பத்து மாதக் குழந்தைகளின் தாயாரே உயிரை மாய்த்துக் கொண்டார்.

கணவருடன் ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாக, அவர் தூக்கிட்டு உயிரை மாய்த்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூக்கிட்ட நிலையில் காணப்பட்ட அவர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கரூவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டார்.

மேலதிக விசாரணைகளை மட்டக்களப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# முல்லைத்தீவு கடலில் அத்துமீறும் ரோலர்கள்

நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,ஒக்.5
முல்லைத்தீவு கடற்பரப்பில், இந்திய ரோலர் படகுகளின் தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொழில் காலங்களில் இந்திய ரோலர்கள், முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதால், உள்ளூர் கடற்றொழிலாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

காலத்துக்குக் காலம் இந்திய ரோலர்களின் தொழில் நடவடிக்கைக்கு எதிராக, முல்லைத்தீவு நகரில் ஆர்ப்பாட்டங்களை கடற்றொழிலாளர்கள் நடாத்தினர். ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு மனுக்களும் கையளித்தனர்.

எனினும் இந்திய ரோலர்கள் தொடர்ச்சியாக மீன்பிடியில் ஈடுபடுகின்றன. சில காலங்களில் இந்திய ரோலர்கள் வருகை குறைந்திருந்தாலும், தற்போது இந்திய ரோலர்களின் நடவடிக்கைகள் மாத்தளன், சாலை ஆகிய கடற்பரப்பில் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால், மாவட்டச் செயலகத்தில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (க-ரி2)

# மாநகர சபைகளின் முதல்வர்கள் மாநாடு




யாழ்ப்பாணம்,ஒக்.5
இலங்கையில் உள்ள மாநகர சபைகளின் முதல்வர்கள் பங்குபற்றும், வருடாந்த மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கை உள்ளூராட்சி மன்ற ஒன்றியங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி கேமந்தி குனசேகரவின் நெறிப்படுத்தலில் மாநாடு இடம்பெற்றது.

யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் மாநாடு இடம்பெற்றது.

மாநாட்டில் இலங்கையில் உள்ள 24 மாநகர சபைகளின் முதல்வர்களில், 18 மாநகர சபை முதல்வர்கள் பங்குபற்றினர்.

கொழும்பு, அக்கரைப்பற்று, நுவரெலியா, கல்முனை, பண்டாரவளை மற்றும் தெகிவளை கல்கிசை ஆகிய மாநகர சபைகளின் முதல்வர்கள் மாநாட்டில் பங்குபற்றவில்லை. (க-20)

# கஞ்சாவுடன் பெண் கைது

கொழும்பு,ஒக்.5
மொறட்டுவை கட்டுபெத்த பகுதியில் கேரள கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 500 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சந்தேக நபரிடமிருந்து ஒரு லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மொறட்டுவை - லுனாவ பகுதியைச் சேர்ந்த 27 வயதான பெண்ணே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அணைகள் இல்லாமல் வெள்ளம் வந்துவிட்டது

கொரோனா பெருந்தொற்று இலங்கையை விட்டு நீங்கவில்லை. எந்தநேரமும் அது சமூகத் தொற்றாக மாறும். எனவே மக்கள் இந்த விடயத்தில் மெத்தனப்போக்குடன் இருக்கக்கூடாது என்று உதயனின் இந்தப் பத்தியில் நேற்றுமுன்தினம் எச்சரிக்கை விடுத்திருந்தோம். இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டு வெறும் 24 மணிநேரத்திலேயே எது நடக்கக்கூடாது என்று எண்ணினோமோ அது நடந்தே விட்டது.

கம்பஹா மாவட்டத்தில் வசிக்கும் பெண்ணொருவருக்குக் கொரோனாத் தொற்றிருப்பது நேற்றுமுன்தினம் பின்னிரவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. காய்ச்சல் காரணமாக கம்பஹா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அந்தப் பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளிலேயே இது தெரியவந்தது. இதையடுத்து சுமார் இரு மாதங்களின் பின்னர் சமூகத்தொற்று என்ற பெரும்பதற்ற நிலை நேற்று இலங்கையெங்கும் வியாபித்தது. தொற்றுக்குள்ளான பெண் பணிபுரிந்த தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது, சுமார் 400 பேர் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களிடம் பி.சி.ஆர் சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன, இரு பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு உத்தரவு போடப்பட்டுள்ளது, இன்னும் பல பகுதிகள் இறுக்கமாகக் கண்காணிக்கப்படுகின்றன, பாடசாலைகளுக்கு அவசர அவசரமாக விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது, முன்பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது, களனி பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து கொரோனா பெருந்தொற்று முழுவதுமாக அற்றுப்போய்விட்டது அல்லது அதன் ஆபத்து குறைந்து விட்டது என்று கருதக்கூடாது என்று ஏற்கனவே பல தடவைகள் எச்சரிக்கப்பட்டு வந்தது. மருத்துவமனைகளிலும், தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் கொரோனாத் தொற்றுடன் பலர் உள்ளனர். ஆதலால் ஒரு சிறு தவறுபோதும் அது சமூகத் தொற்றாக மாறுவதற்கு என்று வல்லுநர்கள் திரும்பத்திரும்ப தெரிவித்து வந்தனர். ஆனால் எந்த எச்சரிக்கையும் கண்டுகொள்ளப்படவில்லை.

சமூக இடைவெளிகளைக் கடைப்பிடித்து பல வாரங்கள் ஆகிவிட்டன. தொற்றுநீக்கிகளைத் தற்போது எந்த அலுவலகங்களிலும் காணக்கிடைப்பதில்லை. முகக்கவசங்களை அணிந்து பயணிப்பவர்கள் என தற்போது எவரும் இல்லை என்றுகூட சொல்லிக்கொள்ளலாம். இந்த மெத்தனப்போக்குத்தனம் மிகப்பெரும் ஆபத்தை வலிந்து கட்டிக்கொண்டுவந்து எம்முன் விட்டுவிட்டு நிற்கின்றது. இனி மீண்டும் அன்றாட உணவுக்கும் அத்தியாவசியத் தேவைக்கும் ஏங்கி நிற்கவேண்டிய நிலை ஏற்படலாம். ஊரடங்கு உத்தரவுகள் இறுக்கமாக்கப்படலாம். பயணத் தடைகள் போடப்படலாம். பள்ளிக்கல்வி பாதிக்கப்படலாம். இவை அனைத்தையும் எவ்வாறு சமாளிக்கப்போகின்றோம்?. இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளமைக்கு நாம்தான் காரணம். கொரோனா ஒன்றும் வலிந்து தொடுக்கும் போர் கிடையாது. எமது தனிப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகள் மூலமே அதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

வடமராட்சியில் சுமார் 40 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்திய மீனவர்களுடன் நெருக்கமான தொடர்பைப் பேணினர் என்ற குற்றச்சாட்டிலும், இந்திய மீனவர்களுடன் நெருக்கமான தொடர்பைப் பேணியவர்களுக்கு நெருக்கமானவர்கள் என்ற அடிப்படையிலும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தியாவில் கொரோனா கோரத்தாண்டவம் காட்டுகின்றது. அங்கிருந்து இலங்கைக்குள் அது கடத்தப்படலாம் என்று காலகாலமாக எச்சரிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் மேற்குறித்த நடவடிக்கையை என்னவென்று சொல்வது.

வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும் என்று சொல்வார்கள். அணைகள் இல்லாமல் வெள்ளம் வந்துவிட்டது. அடுத்தகட்ட நடவடிக்கையையாவது சரியாகச் செய்வோம். பொறுப்புணர்ந்து செயற்படுவோம்.

### வடக்கு, கிழக்கில்

# 72 உள்ளூராட்சி சபைகளில் உட்கட்டுமான அபிவிருத்திகள்

யாழ்ப்பாணம்,ஒக்.5

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரதேச அபிவிருத்தி உதவியளிக்கும் திட்டத்தின் கீழ், 72 உள்ளூராட்சி சபைகளிலும், பல மில்லியன் ரூபா வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் , 87 அபிவிருத்தித் திட்டங்கள் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.**

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்களின் நேரடிக் கண்காணிப்பு அபிவிருத்தியின் கீழ், இந்தத் திட்டம் ஆகக் கூடியது 90 நாள்களை அடிப்படையாகக் கொண்டு விரைந்த அடிப்படையில் முன்னகர்த்தப்படவுள்ளது.

ஆசிய அபிவருத்தி வங்கி , ஐரோப்பிய யூனியன், இலங்கை அரசு ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடன் இந்தத் திட்டம் முதற்கட்டமாக முன்னகர்த்தப்படுகின்றது. நாடு தழுவிய ரீதியில் விலை மனுக் கோரப்பட்டுள்ளதால், வடக்கு, கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சி சபைகளிலும் இன்னமும் மூன்று வாரங்களில் உட்கட்டுமான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கும் சாத்தியம் உள்ளதாக தேசிய திட்ட பிரதேச உதவியளிக்கும் திட்டத்தின் திட்டப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக தேசிய திட்டப்பிரிவு, ஏற்கனவே உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டத்துக்கான நிதியின் ஒரு பகுதியை, அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக விடுவிப்பு செய்துள்ளது.

மக்கள் பங்கேற்பு முன்னுரிமைத்திட்டத்தின் பிரகாரம், தேர்ந்தெடுக்கபட்ட கருத்திட்டமே தற்போது உட்கட்டுமான திட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நெல்சிப் என்ற வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மேம்படுத்தல் திட்டமே சபைக்கு 200 மில்லியன் ரூபா திட்டமாக உள்ளூராட்சி வரலாற்றில் பெரும் கருத்திட்டமாகப் பேசப்பட்டது.

தற்போது ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கு வெறும் 3 முதல் 10 மில்லியன் ரூபாவுக்கு உட்பட்ட நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது என்று சபைகளின் தவிசாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்தத் திட்டம் வெற்றிகரமாக உள்ளூராட்சி சபைகளால் முன்னெடுத்து அபிவிருத்திசெய்யப்படும்போது, திட்டத்தின் கட்டம் 2 தொடர்பில் தேசிய திட்டப்பிரிவு, அடுத்த கட்ட நகர்வு தொடர்பில் முடிவு செய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-50)

## அனுமதி அட்டைகள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி க. பொ.த உயர்தர- 2020 க்குரிய பரீட்சை அனுமதி அட்டைகள் இன்று காலை 9 மணிக்கு வழங்கப்படும் என்று கல்லூரி முதல்வர் ஆர்.செந்தில்மாறன் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, உரிய நேரத்துக்கு வருகை தந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பெண்களின் சடலங்களை மறைத்து வைத்தவர் கைது

கொழும்பு,ஒக்.5

சட்ட விரோதமாக அமைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கி உயிரிழந்த, இரண்டு பெண்களின் சடலங்களை வனப்பகுதியில் மறைத்து வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹெம்மாத்தகம - அம்பதெனியப் பகுதியில், பொலிஸார் முன்னெடுத்த திடீர் சுற்றி வளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்கள் இருவரும் நான்கு தினங்களுக்கு முன்னர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

அம்பதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 67 மற்றும் 36 வயதான இரு பெண்களே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர். (க-இ)

## பஸ் பயணத்துக்கு வந்தது கட்டுப்பாடு

கொழும்பு.ஒக்.5

அனைத்து தனியார் மற்றும் அரச பஸ்களில் பயணிப்பதற்கு அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. அதற்கமைய உடன் அமுலுக்கு வரும் வகையில், சகல அரச மற்றும் தனியார் பஸ்களிலும், ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாத்திரம் பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும்.

இந்த விடயம் தொடர்பான அறிவிப்பை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம வெளியிட்டுள்ளார். ஏற்கனவே இந்தத் திட்டம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், கொரோனாத் தொற்று அச்சம் குறைவடைந்ததைத் தொடர்ந்து, இறுக்கமான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில், உடன் அமுலுக்கு வரும் வரையில், இந்தத் திட்டம் இறுக்கமான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்று திலும் அமுனுகம தெரிவித்தார். (க-இ)

# சுற்றாடலைப் பாதிக்கும் வகையில் செயற்பட்டால் கடும் நடவடிக்கை



மட்டக்களப்பு, ஒக்.5

**சுற்றாடலை பாதிக்கும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அவ்வாறான எந்த நடவடிக்கைகளையும் அனுமதிக்கமுடியாது என சுற்றாடல்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்புக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட சுற்றாடல்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சிவயோகநாதன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். கலந்துரையாடலில், மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மண் கடத்தல் உட்பட இயற்கை வளங்கள் சட்ட விரோதமான முறையில் அழிக்கப்படுவது தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இது தொடர்பில் அமைச்சர் தெரிவிக்கையில்,

இந்த மாவட்டத்தில் உள்ள மண் வளத்தை இங்குள்ள மக்களே அதிகளவில் பயன்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். எனது பெயரையும் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் பெயர்களையும் பயன்படுத்தி சிலர் மண் அனுமதிகளைக் கோருகின்றனர். அவ்வாறானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்துக்கு முரணான வகையில் எந்த நடவடிக்கைகளை எவர்தான் மேற்கொண்டாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.மேலும் புதிதாக எந்த மண் அனுமதிகளும் வழங்கப்படமாட்டாது. வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் தொடர்பிலும் மீளாய்வு முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## இளைஞர்கள் மூவர் சடலங்களாக மீட்பு

கொழும்பு.ஒக்.5

நீர்கொழும்பு - செத்தபாடு - கம்மல்தொட்ட முகத்துவாரம் கடற்பகுதியில், நீராடச் சென்று காணாமல் போன 3 இளைஞர்களும் சடலங்களாக நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

7 இளைஞர்கள் நீராடச் சென்ற நிலையில், மூன்று பேர் நேற்றுமுன்தினம் காணாமல் போயிருந்தனர்.

அவர்களில் இரண்டு பேர் தலவாக்கலையைச் சேர்ந்தவர்கள். ஒருவர் பதுளை நமுனுகுலையைச் சேர்ந்தவர். நீர்கொழும்பிலுள்ள நண்பர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்குச் சென்றிருந்த நிலையில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. (சு-இ)

## ரத்மலானை ரொஹாவின் உதவியாளர்கள் கைது

கொழும்பு, ஒக்.5

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த ரத்மலானை ரொஹாவின் உதவியாளர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் இரத்மலானை பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் மொரட்டுவைப் பகுதியைச் சேர்ந்த 28, 34, 38 மற்றும் 44 வயதுடையவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இதன்போது ரீ-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் 255 ரவைகள் மற்றும் 8 மில்லிமீற்றர் ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் ரவைகள் உள்ளிட்டவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (வ-இ)

## விசர்நாய் கடி இறப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.5

நாட்டில் கடந்த இரு வாரங்களுக்குள் விசர்நாய்க் கடி தொடர்பான நான்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. எனவே பொதுமக்கள் தமது செல்லப்பிராணிகள் மற்றும் கால்நடைகளுக்கு தடுப்பூசிகளை செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேசிய மருத்துவமனையின் விசர்நாய்க் கடி சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பான மருத்துவ அதிகாரி அமிலா குணசேர இதனை வலியுறுத்தியுள்ளார்.

செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் மற்றும் சமூக நாய்களுக்கு உணவளிப்போர் தங்கள் செல்லப்பிராணிகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொண்டால் மாத்திரமே இந்த நோயை நாட்டிலிருந்து அகற்றமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவராவது ஒரு விலங்கைச் செல்லப்பிராணியாக வைத்திருந்தால், அவைகளுக்கு உணவளிப்பது மாத்திரமல்ல, உரிய தங்குமிடம், மருத்துவ பராமரிப்பு, விசர் நாய்க்கடித் தடுப்பூசி போன்றவற்றை வழங்க வேண்டும். சமூகத்தில் காணப்படும் நாய்களுக்கு தடுப்பூசி போடாமல் மக்கள் உணவளிப்பதும் வைரஸ் பரவுவதை அதிகரிக்கிறது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (வ-இ)

## உயிரிழந்த நிலையில் கரையொதுங்கும் கடலாமைகள்





கொழும்பு, ஒக்.5

கல்கிஸை கடற்கரைப் பகுதியில் உயிரிழந்த நிலையில் கடலாமைகள் பல கரையொதுங்கியுள்ளன என கல்கிஸை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நேற்று மாலை வரை மொத்தம் மூன்று கடலாமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. இதே வேளை காலிமுகத்திடல் பகுதியிலும் உயிரிழந்த நிலையில் கடல் ஆமைகள் சில கரையொதுங்கியுள்ளன என எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆமைகளின் உயிரிழப்புக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (வ-இ)

## ரேபிஸ் தொற்றுக்குள்ளான ஐந்து நரிகள் அடையாளம்

கொழும்பு, ஒக்.5

இலங்கையில் சில பகுதிகளில் 'ரேபீஸ்' என்ற நோய்த் தொற்றுக்குள்ளான 5 நரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என வனவிலங்கு திணைக்களம் தெரிவித்துள்ளது. மில்லனிய, ஹொரண, இங்கிரிய மற்றும் மதுராவல ஆகிய பிரதேசங்களில் இந்த நரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த நரிகளின் தாக்குதலினால் பலர் ரேபிஸ் நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். பொதுவாக பராமரிப்பற்ற நாய்கள் கடித்தாலே இந்த ரேபிஸ் நோய் பரவும்.

எனினும் கடந்த சில நாட்களாக நரிகளினால் தாக்கப்பட்ட பலர் இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (வ-இ)

# ரிஷாட்டுக்கு அரசுக்குள் இடமில்லை அரசு தரப்பு அழுத்தமாகத் தெரிவிப்பு

### திருச்சபையின் கருத்துக்கு எதிரொலி





கொழும்பு, ஒக்.5

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு அரசாங்கத்துக்குள் எந்த இடமுமில்லை என அரசு தரப்பு தெரிவித்துள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் கைதாகிய முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் சகோதரர் ரியாத் விடுவிக்கப்பட்டதன் பின்னணியில் மறைக்கப்பட்ட ஒப்பந்தம் ஒன்று உள்ளது என கத்தோலிக்க திருச்சபை சந்தேகம் வெளியிட்டது. இதையடுத்தே அரச தரப்புக்கள் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளன. இதன்படி, முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு அரசில் பதவி வழங்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. கடும்போக்குவாதிகளுடன் எந்தவிதமான உடன்படிக்கையையும் அரசாங்கம் செய்து கொள்ளாது என்று விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, பதியுதீன் அரசாங்கத்துக்குள் கொண்டுவரப்பட மாட்டார் என்று தெரிவித்துள்ளார்.

ரிசாட்டுடன் ஒப்பந்தம் செய்ய அரசாங்கம் முட்டாள் அல்ல என்று அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள் ளார். இதேவேளை, தனது கட்சி அரசாங்கத்துடன் எந்த உடன்பாடும் கொண்டிருக்கவில்லை. அத்துடன் அரசாங்கத்துடன் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.(வ-இ)

# இன்றைய நாள்

**மேடம்:** வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம். விருப்பத்துக்குரியவரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும்.

**இடபம்:** தாயின் உடல்நிலையில் இருந்த பிரச்னைகள் தீரும். உங்கள் பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். திடீர் நன்மை அடைவீர்கள். மதிப்புக்கூடும்.

**மிதுனம்:** நண்பரின் செயலில் குறை காண வேண்டாம். உத்வேகத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கு அளவான மூலதனம் உதவும். உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**கடகம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். பல நாட்களாக தள்ளிப்போன பயணம் அமையும். குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும் . நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** விருந்தினர்களின் வருகை காரணமாகப் பிரச்னை தீரும். மனஸ்தாபம் ஏற்படும். அலுவலகப் பொறுப்புகளை கவனமாக செய்வது நல்லது. நித்திரையில் இனிய கனவு வரும்.

**கன்னி:** பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். புதிய முயற்சிகள் வெற்றி பெறுவதில் சிறு தடைகள் ஏற்படும். நண்பரின் உதவியால் மகத்தான விஷயம் ஒன்றை முடிப்பீர்கள்.

**துலாம்:** வம்பு வேண்டாம். தீய நண்பர்களைத் தவிர்க்க வேண்டும். வியாபாரத்தில்சிறுலாபம்அடைவீர்கள். சிக்கல் ஒன்று தீரும். உறவினர்களிடம் உதவிகள் எதிர்பார்க்க வேண்டாம்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட விஷயம் நடைபெறும். கடன் பாக்கிகள் வசூலாகும் இயந்திரங்களில் எச்சரிக்கையாக செயல்படுவது அவசியம். பாராட்டு கிடைக்கும். குடும்பத்தினரின் அன்புக்குப் பாத்திரமாவீர்கள்.

**தனுசு:** மேலதிகாரியை எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நல்லது. புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். குடும்பத்தில் பரபரப்பு ஏற்படும். உழைப்புக்கு ஏற்ற பலனும், பாராட்டும் கிடைக்கும்.


**மகரம்:** பணியாளர்களிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். விரும்பிய பொருள் எதிர்பாராமல் கிடைக்கும். குறை கூறுவதை நிறுத்துங்கள். வளைந்து கொடுத்து போவது நல்லது.

**கும்பம்:** பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்களுக்கு நீங்கள் உறுதுணையாக இருப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். பணியில் முயற்சியைத் தொடருங்கள்.

**மீனம்:** சுபச்செய்தியால் வீடுகளைகட்டும். செலவு அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய கொள்முதல் செய்வீர்கள். இளைஞர்கள் சாதனை செய்ய வாய்ப்பு அதிகரிக்கும்.

# கட்டுப்பாட்டு விலையால் தேங்காய்க்கு தட்டுப்பாடு

## வர்த்தகர்கள் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.5**

**தேங்காய்க்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாலேயே சந்தையில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.**

எனினும் சில இடங்களில் கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்கு தொடர்ந்தும் தேங்காய்கள் விற்பனை செய்யப்படுகின்றன என நுகர்வோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் தேங்காய்களின் சுற்றளவுக்கு அமைய விலை நிர்ணயிக்கப்பட்ட அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது. இதற்கமைய, 13 அங்குலங்களுக்குமேல் சுற்றளவு கொண்ட தேங்காய் ஒன்றின் உச்சபட்ச சில்லறை விலை 70 ரூபாவாகவும். 12 முதல் 13 அங்குல சுற்றளவு கொண்ட தேங்காய் ஒன்றின் விலை 65 ரூபாவாகவும் 12 அங்குலத்தை விடவும் குறைந்த சுற்றளவு கொண்ட தேங்காய் ஒன்றின் விலை 60 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனினும் இந்த விலைகளுக்கு தேங்காய்கள் விற்பனை செய்யப்படுவதில்லை என நுகர்வோர் குற்றம் சாட்டுக்கின்றனர். (வ-இ)

# 'விதையனைத்தும் விருட்சமே' மாபெரும் சமூகப் பணி

யாழ்ப்பாணம், ஒக்.5

விதையனைத்தும் விருட்சமே' இளைஞரணியின் ஏற்பாட்டில் "பிளாஸ்டிக் அற்ற யாழை நோக்கிய பயணம்" எனும் தொனிப்பொருளிலான மூன்றாம் கட்ட சமூகப் பணி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் முற்பகல் 11.30 மணிவரை சாவகச்சேரி சரசாலை குருவிக்காட்டுப் பகுதியில் நடைபெற்றது.

சரசாலை குருவிக்காடு பறவைகள் சரணாலயப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வீசப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் உரிய வகையில் தரம் பிரிக்கப்பட்டு, அவை அகற்றப்பட்டு சாவகச்சேரி பிரதேச சபை வாகனங்களில் மீள்சுழற்சிக்காக எடுத்துச் செல்லப்பட்டன. மேலும் முறையற்ற வகையில் குறித்த பகுதியில் கொட்டப்பட்டிருந்த பெருமளவு தனியார் மருத்துவமனைக் கழிவுகள், குழந்தைகள், நோயாளர்களுக்கான பம்பஸ் கழிவுகளும் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன.

"பிளாஸ்டிக் கழிவுகள் அற்ற யாழை நோக்கிய பயணம்" எனும் தொனிப்பொருளிலான மாபெரும் சமூகப் பணி 'விதையனைத்தும் விருட்சமே' இளைஞரணியால் கடந்த ஓகஸ்ட் மாதம் 15ம் திகதி தென்மராட்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கைதடிச்சந்தி முதல் சாவகச்சேரி நகரம் வரை முதலாம் கட்டம் இடம்பெற்ற நிலையில் இரண்டாவது கட்டப் பணி கடந்த மாதம் 5 ஆம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகம் மற்றும் தெல்லிப்பழை நகர வீதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ந்து மூன்றாம் கட்டம் சாவகச்சேரி சரசாலை குருவிக்காட்டுப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் சமூகப் பணியின் நான்காம் கட்டம் குறித்து விரைவில் அறிவிக்கப்படுமென விதையனைத்தும் விருட்சமே இளைஞரணியினர் தெரிவித்துள்ளனர். (ரு-222)





சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் வருடாந்த சிறுவர் தின நிகழ்வுகள், கல்லூரியின் முன்றலில் கல்லூரியின் அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

## ஜோர்தான் தொழிற்சாலையில்

# 300 இலங்கையருக்கு கொரோனாத் தொற்று

ஜோர்தானிலுள்ள தொழிற்சாலையொன்றில் பணியாற்றும் 300 இலங்கையர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் சமூக வலைத்தளங்களில் காணொலியை வெளியிட்டுள்ளனர்.

ஆயிரத்து 200பேர் பணிபுரியும் அந்தத் தொழிற்சாலையில் 400 இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். ஜோர்தானில் கொரோனாத் தொற்றுக்குள்ளான இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தங்களுடன் பணியாற்றிய நண்பர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனவும், ஜோர்தானில் 5 தொழிற்சாலைகள் கொரோனா காரணமாக சீல் வைக்கப்பட்டுள்ளன எனவும் இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வெளிவிவகார பணியகத்தின் ஊடக பேச்சாளரிடம் கேட்டபோது, தொற்றுக்குள்ளான இலங்கையர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



# ‘கிராமத்திற்கு ஒரு வீடு’ முதற்கட்ட நிதி வழங்கல்

கொடிகாமம், ஒக்.5
புதிய அரசாங்கத்தின் “கிராமத்திற்கு ஒரு வீடு” திட்டத்தின் கீழ் யாழ் .மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 44 பயனாளிகளுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வீடு அமைப்பதற்கான முதற்கட்ட நிதி வழங்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ் மாவட்டத் தலைவர் ரவீந்திரன் தலைமையில் வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேசசபை உறுப்பினரான சதாசிவம் இராமநாதன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கினார். (ந-159)

# ஊழியர்களின் ஓய்வுக்காலம் இன்னொரு சேவைக்காலம்

## இளம் சமுதாயத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்கிறார் யாழ்.பிரதேச செயலர் சுதர்சன்

**குருநகர், ஒக்.5**
**அரச ஊழியர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் அவ் ஓய்வுக்காலம் இன்னொரு சேவைக்காலம் ஆகும் என யாழ்.பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் தெரிவித்துள்ளார்.**

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாண பிரதேச பிரிவு சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் மலர் வெளியீட்டு நிகழ்வும் கடந்த 26ஆம் திகதி யாழ்.பிரதேச செயலகத்தில் அதன் தலைவர் வி.சிறிசக்திவேல் தலைமையில் நடைபெற்றன.
நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,
சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள ஓய்வூதியர்கள் தாம் வசிக்கும் பகுதிகளில் இயங்கிவரும் முதியோர் சங்கங்களில் இணைந்து சேவையாற்ற முன்வரவேண்டும். உங்கள் ஒத்துழைப்பு உங்கள் பகுதியில் இயங்கும் கிராம உத்தியோகத்தர்களுக்குத் தேவை. எமது பிரதேச அபிவிருத்தியில் உங்கள் அனுபவம் தேவை. முதுமையில் இளமை அவசியம். ஆனால் இன்று சேவையில் உள்ள பலர் இளமையில் முதுமையாகக் கடமையாற்றுவதனால் அரச சேவையை சிறப்பாக முன்நகர்த்த முடியாமல் உள்ளது.
நீங்கள் உங்கள் சேவைக்காலத்தில் வடக்கு மாகாணத்தில் பல அச்சுறுத்தலுக்கு மத்தியில் சேவை புரிந்துள்ளீர்கள். அப்போது பல சவால்களைச் சந்தித்தவர்கள். அன்றைய காலப் பகுதியில் வசதிகளற்ற நிலையில் போரின் மத்தியில் கடமையாற்றியவர்கள். ஆனால் இன்றைய அரச ஊழியர்கள் தற்போது பல வசதிகளுடன் கடமையாற்றுகிறார்கள். அந்தக் காலத்தில் நீங்கள் செய்த சேவையை ஆவணப்படுத்த நாம் முன்வரவேண்டும் - என்றார். (ந-51)

# அனலைதீவு தெற்கில் மீன்பிடி படகுத் துறை மக்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5
அனலைதீவு ஜே/38 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் பயனுறும் விதமாக அனலைதீவு தெற்கில் புனரமைக்கப்பட்ட மீன்பிடி படகுத்துறையை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.
மேற்படி மீன்பிடித் துறையை ஆழப்படுத்தல் திட்டமானது கடற்தொழிலாளர் சங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு செயற்குழுவின் செயலாளர் தவச்செல்வம் சிற்பரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலுக்கமைய ரூபா. 5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு மீனவர்களிடம் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டுள்ளது.
ஆபத்தான கடற் பாறைகள் நிறைந்த கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு பெரும் அசௌகரியங்களை இப் பிரதேச மீனவர்கள் சந்தித்து வந்துள்ளார்கள். இத் திடத்தின் பயனாக இனிவரும் காலங்களில் பாதுகாப்பான முறையில் இப் பிரதேச மக்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியும் என கடற்தொழில் சங்கத் தலைவர் ஜோன் பொஸ்கோ தெரிவித்துள்ளார்.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், பேராசிரியர் வி.பி.சிவநாதன், திரு. தவச்செல்வம் சிற்பரன், மதகுருமார்கள், இளைஞர் அணி உறுப்பினர் திரு.சி.மதுசன், ஊர்காவற்துறை பிரதேச செயலக அதிகாரிகள், கடற்தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந)



# ரூபன் சர்மாவின் படுகொலையின் உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும்


## சைவ மகா சபை கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக்.5
புங்குடுதீவு - பாணாவிடை சிவன் ஆலய பிரதம அர்ச்சகர் ரூபன் சர்மாவின் படுகொலையை அகில இலங்கை சைவ மகா சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.
கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்குவதன் மூலம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட தரப்புக்களை சைவ மகா சபை கேட்டுக்கொண்டுள்ளது.
மேற்படி படுகொலை தொடர்பாக சைவ மகா சபை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
தாய் மதமாம் சைவ சமயத்தில் அளவுகடந்த பற்றுறுதிகொண்ட ரூபன் சர்மா, ஜீவகாருண்யத்துற்காக அதிகம் போராடியவர். சமூகவிரோதச் செயல்களுக்கு எதிராக துணிந்து குரல்கொடுத்தவர். இந்த நிலையிலேயே இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். இந்தக் கொலையின் பின்னணி ஆராயப்பட்டு உண்மை வெளிக்கொண்டு வரப்படவேண்டும். கொலையாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும். இதன்மூலம் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படவேண்டும்.
மனிதத்துவத்திற்கும் ஜீவகாருண்யத்திற்குமாகப் போராடி உயிர்துறந்த தாய் மதத்தில் அளவு கடந்த பற்றுறுதி உடைய வணக்கத்துக்கும் போற்றுதலுக்குரிய ரூபன் சர்மாவிற்கு ஆத்மார்த்த அஞ்சலிகள். அவரது ஆத்மா இறை சிவனின் பாதார விந்தங்களில் சாந்திபெறும். அவரது நல்ல எண்ணங்கள் இவ்வுலகில் நிலைத்து நிற்கும். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)



சுசிலன் பவுன்டேசன் நிறுவனத்தினரால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பண்டாரவன்னியன் மகா வித்தியாலயம், மன்னாகண்டல் பாடசாலை, பேராறு பாடசாலை , முத்துவிநாயகர் பாடசாலை, சம்மாளங்குளம் பாடசாலை, அலைகல்லுப்போட்டகுளம் ஆகிய பாடசாலைகளை இணைத்து புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ள இருக்கும் மாணவர்களின் சித்திவீதத்தை உயர்த்தும் முகமாக விசேட செயலமர்வு நடாத்தப்பட்டது. இதற்கான நிதி உதவியை சுசீலன் பௌண்டேசன் இணைப்பாளர்களில் ஒருவரான புஸ்பராசா கபிலன் வழங்கியிருந்தார். (ந-222)





# காப்பெற் வீதி பணிகள் வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா,ஒக்.5
ஆசிகுளம் கிராமசேவகர் பிரிவில் 3 கிலோமீற்றர் நீளமான வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.
ஜனாதிபதியின் விசேட வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தினூடாக கற்குளம் படிவம் 1,2,3,4 ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதான வீதி புனரமைப்புக்கு 78 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப பணிகள் உத்தியோகபூர்வமாக நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
ஆரம்ப நிகழ்வில் வவுனியா நகரசபை உப தவிசாளர் சு.குமாரசமி, தெற்கு தமிழ் பிரதேசசபை உப தவிசாளர். வே.மஹேந்திரன், பிரதேசசபை உறுப்பினர். திரவியவதனி, வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந-110)

# இயக்கச்சி – கோவில்வயல் பகுதியில் வனஜீவராசி திணைக்களத்தினர் அடாவடி

- விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகள் கைது
- விவசாய உபகரணங்களும் பறிமுதல்

**கிளிநொச்சி, ஒக்.5**
**இயக்கச்சி, கோவில்வயல் பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் காணி உரித்து ஆவணங்களுடன் வயல் விதைப்பில் ஈடுபட்டிருந்த இயக்கச்சி பகுதியைச் சேர்ந்த 12 விவசாயிகளை, சுண்டிக்குளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் அத்துமீறி வயல் விதைப்பில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சுமத்தி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.**

அத்துடன் அவர்கள் பயன்படுத்திய வாகனங்கள், பாவித்த உபகரணங்கள் மற்றும் தொலைபேசிகளையும் பறிமுதல் செய்து அவர்களை அறிவியல் நகர்ப் பகுதியிலுள்ள தமது அலுவலகத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து இவ்விடயம் அவர்களது உறவினர்களால் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஜீவராஜா ஆகியோர் அறிவியல் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள வனஜீவராசிகள் திணைக்கள பிரதான அலுவலகத்துக்குச் சென்றபோது கைதுசெய்யப்பட்டவர்கள் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் கைது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் வினவியபோது அதிகாரிகள் அதற்கான பதிலை வழங்க மறுத்துள்ளனர்.



கைதானவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேட்டுக்கொண்டபோதும், அவர்கள் எவ்வித உடன்பாட்டுக்கும் வரவில்லை. தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாதுவிடின் இவ்விடத்தை விட்டுச் செல்ல முடியாது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அலுவலக வாயிலில் அமர்ந்ததன் பின்னர், கைதுசெய்யப்பட்ட 12 பேரையும், அவர்களது உடமைகளையும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மாலை 6 மணியளவில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முற்படுத்தியிருந்தனர். 12 பேரும் நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் விவசாய நடவடிக்கை மேற்கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டு தமக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக கோவில்வயல் மக்கள் தெரிவிக்கின்றனர் .

இது தொடர்பாக கோவில்வயல் கமக்கார அமைப்பின் செயலாளர் தெரிவிக்கையில், இப் பகுதியில் 1974 ஆம் ஆண்டு முதல் விவசாயம் செய்து வருகின்றோம்.

போர் நிறைவடைந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் 2017 ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை விவசாய நடவடிக்கையை மேற்கொண்டோம்.

ஆனால் நேற்றுமுன்தினம் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வந்து வயல் விதைப்பில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவித்தார். (ந-6)



முல்லைத்தீவு துணுக்காய் வலயத்தின் மூன்று பாடசாலைகளின் தரம்-5 மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு, முல்லைத்தீவு மயில்வாகனன் ஆரம்ப பாடசாலை அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்பான ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.





## தீவக விருட்சத்தால் முன்பள்ளிக்கு உதவி

தெல்லிப்பழை. ஒக்,5
சிறுவர் தினத்தை முன்னிட்டு தீவக விருட்சம் குழுமத்தின் மறைந்த உபதலைவர் மாறனின் நினைவாக, தீவக குழுமத்தின் அனுசரணையில். தெல்லிப்பழை கட்டுவன் முன்பள்ளியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் சிறுவர்களுக்கான அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டதுடன், முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து முன்பள்ளியின் வளாகத்தில் நடுவதற்கென மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

சமூக செயற்பாட்டாளர் தனுபனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் முன்பள்ளி மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ந)



## மாகாணமட்ட கருத்தரங்கு

முல்லைத்தீவு, செப்.5
இம் மாதம் இடம்பெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு மாகாண மட்டக் கருத்தரங்கு ஒன்று துணுக்காய் கல்வி வலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்துவந்தவருமான அமரர் சித்திரகலா சண்முகநாதனின் இரண்டாம் ஆண்டு நினைவாக அவரது குடும்பத்தவர்களின் நிதிப் பங்களிப்பில் வடமாகாண ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சற்குணராசா தலைமையில் இக்கருத்தரங்கு இடம்பெற்றது. நான்கு பிரிவுகளாக இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் வலயத்தின் எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ந)

## காரைநகர் பிரதேச சபையின் முக்கிய வீதிகள் மீள்புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5
காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட நாகம்மாள் வீதி மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. பிரதேச அபிவிருத்தி உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் 3.099 மில்லியன் ரூபாவில் இத்திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வீதியை மீள்புனரமைக்க ஆர்வம் உள்ளோர் காரைநகர் பிரதேச சபையுடன் உடன் தொடர்பு கொள்ளலாம் என பிரதேச சபை தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் அறிவித்துள்ளார்.

அத்துடன், பிரதேச அபிவிருத்தி உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச சபைக் குட்பட்ட காளி வயல் வீதி, வல்லியானந்தம் சுற்றுவீதி, ஆயில் நின்று ஒல்லை வீதி ஆகிய மூன்று வீதிகளும் ஒரே நேரத்தில் மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-50)

## முத்தமிழ் ஆரம்பப் பாடசாலையில் சிறுவர்தின நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், ஒக்.5
யாழ்ப்பாணம் நல்லூர் முத்தமிழ் ஆரம்ப பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள் பொறுப்பாசிரியர் சியாமளா சன்முகலிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பாடசாலையில் நடைபெற்றன.

அவ்வேளை பிரதேசசபை உறுப்பினர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார், சட்டத்தரணி சுதா கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறுவர் சிறுமிகளை மகிழ்வித்து வாழ்த்தினர்.

நிகழ்வில் சிறுவர், சிறுமிகள் இணைந்து கேக் வெட்டி குதூகலத்துடன் இந்நாளைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந் நிகழ்வில் பாடசாலையின் முகாமைத்துவக் குழுத்தலைவர் செ.விபூஷன், சமூக செயற்பாட்டாளரும், உறுப்பினருமாகிய சி.அமிர்தலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (ந-20)

## பாடசாலைக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் பதிவு

### பெற்றோரால் ஆளுநருக்கு மனு

முல்லைத்தீவு,ஒக்.5
முல்லைத்தீவு, மல்லாவி மத்திய கல்லூரிக்கு எதிராககல்லூரியின் பழைய மாணவர்கள் இருவர், இணையத்தளங்களிலும்,சமூகவலைத்தளங்களிலும்பொய்யானபரப்புரைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதுதொடர்பாகபெற்றோரால்வடமாகாணஆளுநரிடம்மனுவொன்றுகையளிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி தொடர்பாக பழைய மாணவர்கள் இருவர், பல்வேறு குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து சமூகவலைத்தளங்களில் பொய்யான பரப்புரைகளைப் பதிவேற்றியிருந்தனர். இதனையடுத்து ஒன்றுதிரண்டபெற்றோர், 379 பேரின் கையொப்பத்துடன், ஆளுநருக்கு மனுவொன்றைக் கையளித்தனர்.

இது தொடர்பாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மாலதி முகுந்தனிடம் கேட்டபோது,

மல்லாவிமத்தியகல்லூரி வலயம், மாகாணம், தேசிய ரீதியில் கல்வியிலும், பிற விதான பாடச் செயற்பாடுகளிலும் பல முத்திரைகளைப் பதித்து வருகின்றது. கல்லூரியின் பழைய மாணவர்கள் இருவர், கல்லூரி தொடர்பாககுற்றச்சாட்டுகளுடன் மனுவொன்றைக் கையளித்திருந்தனர்.வலயக் கல்விப் பணிமனையால், விசாரணைகளை நடாத்தி வருகின்றோம். கடிதம் கையளித்து ஒரு வாரத்துக்குள்ளேயே, பழைய மாணவர்கள் இருவரும், வடமாகாண ஆளுநருக்கும் அந்த மனுவைக் கையளித்தனர்.இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் கல்லூரி தொடர்பாக செய்திகளை வெளியிட்டு வருகின்றனர். கல்லூரியின் இரு பழைய மாணவர்களும் வலயத்தின் விசாரணைகளின் முடிவுகளை எதிர்பாராமல், ஆளுநரிடம் சென்றது பிழையானவிடயமல்ல. ஆனால் விசாரணைகள் வலயத்தால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதே, இணையத் தளங்களிலும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் குற்றச்சாட்டுகளைப் பரப்புரையாக மேற்கொள்வது ஏற்புடையதல்ல. பழைய மாணவர்கள் சரியாகச் செயற்படுகின்றார்கள் என்றால், கல்லூரி தொடர்பாக இணையத் தளங்களிலும், சமூக வலைத் தளங்களிலும் விசாரணை நடைபெறும் நேரத்தில் செய்திகளை வெளியிட்டு இருக்கக் கூடாது. ஆனாலும் கல்லூரிதொடர்பாகதெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன. கடந்த காலங்களிலும் கல்லூரிதொடர்பாகதெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக நடைபெற்ற விசாரணைகளில் குற்றங்கள் இனங் காணப்படவில்லை.-என்றார். (க-ரி2)

# ஆபத்து மிக அருகில்: அவதானம் அவசியம்

## முகக் கவசம் அணியுமாறு வலியுறுத்து

**கொழும்பு, ஒக். 5**
**'வைரஸுடனேயே நாம் போராடுகின்றோம். எனவே, எமது கட்டுப்பாட்டைமீறி எந்நேரத்தில் வேண்டுமானாலும் அது சமூகத்துக்குள் பரவக்கூடும். ஆகவே, சுகாதார நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுங்கள்' இவ்வாறு சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமர வீர கோரிக்கை விடுத்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அவதானமாக செயற்படுங்கள், அவ்வாறு இல்லையேல் சமூகத்தொற்று ஏற்படக்கூடும் என்ற எச்சரிக்கையை நாம் தொடர்ச்சியாக விடுத்திருந்தோம். அதுமட்டுமல்ல வைரஸ் என்பது எமது கட்டுப்பாட்டைமீறி பரவக்கூடும் எனவும் எச்சரித்திருந்தோம். அவ்வாறானதொரு நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

எனவே, அநாவசியமாக பொது வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள், வெளியில் வரும்போது கட்டாயம் முகக்கவசம் அணியுங்கள், கைகளைச் சவக்காரமிட்டு கழுவுங்கள், சமூக இடைவெளியைப் பின்பற்றுங்கள் போன்ற ஆலோசனைகளை மீண்டும் வலியுறுத்துகின்றோம். நிறுவனங்களிலும் சுகாதார நடைமுறை பின்பற்றப்படவேண்டும்.

நிறுவனங்களுக்கு வருபவர்களின் பெயர், விபரங்கள் பதிவு செய்யப்படவேண்டும், உடல் உஷ்ணம் கணிக்கப்படவேண்டும். 'கொரோனா' வைரஸை ஒழிப்பதற்காக சுகாதார அமைச்சும், அரசும் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.' என்றார். (ம-44)

# வடக்கில் புதிய நீதிமன்ற கட்டடங்கள் 14,15 ஆம் திகதிகளில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5
முல்லைத்தீவு நகரில் புதிதாக அமைக்கப்பட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதியும், மாங்குளம் ஏ9 வீதியோரம் அமைக்கப்பட்ட சுற்றுலா நீதிமன்றமும் எதிர்வரும் 14ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மறுநாள் 15ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது என்று நீதி அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் சுமார் 18 கோடி ரூபா செலவில் புதிதாக நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு சகல வேலைகளும் நிறைவடைந்துள்ளன. யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம் மற்றும் சிவில் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றம் ஆகியவை இயங்கி வருகின்றன. எனினும், வழக்குகளுக்காக நீதிமன்ற ங்களுக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகம் என்பதனால் இடப்பற்றாக்குறை பல வருடங்களாகவே இருந்துவருகின்றது. இந்த நிலையில் வழக்குகளை சிரமமின்றி நடத்தும் வகையில் புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரிலுள்ள நீதிமன்றிலும், இடப்பற்றாக்குறை மற்றும் இதர வசதிகள் இன்மையால் பெரும் இடையூறுகளை மக்களும் அலுவலர்களும் எதிர்கொண்டுவந்தனர்.

தவிர, முல்லைத்தீவு மாவட்டத்துக்கென ஒரேயொரு நீதிமன்றமே இயங்குவதனால் மாங்குளம், துணுக்காய் மற்றும் மல்லாவி உட்பட ஏ-9 வீதியை அண்மித்துள்ள மக்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டு வந்தனர். அவர்கள் நீண்டதூரம் பயணித்தே வழக்குகளுக்காக முல்லைத்தீவு நீதிமன்றுக்குச் சென்றுவந்தனர். இந்த நிலையில், மாங்குளம் ஏ9 வீதியோரம், சுற்றுலா நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நீதிமன்றங்களும் சுமாராக தலா 28 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

மாங்குளம் பகுதி நீதிமன்றம், சுற்றுலா நீதிமன்றமாக தற்போது இயங்கவுள்ளது. அதாவது வாரத்தில் ஒரு நாள் அந்த நீதிமன்றில் அந்தப் பகுதியிலுள்ள மக்களின் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படும்.

இந்த மூன்று நீதிமன்றங்களும் திறந்துவைக்கப்படும் நிகழ்வில் நீதி அமைச்சர், நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் அலுவலர்கள் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்துக்கென்றும் ஒரு நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றது. (த-9)

## முகாம்களுக்குள் முடங்க படையினருக்கு உத்தரவு!

கொழும்பு, ஒக். 5
திவுலபிட்டிய மற்றும் மினுவங்கொட பிரதேசங்களில் உள்ள இராணுவ, விமானப்படை, கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு படைப் பிரிவுகளைச் சேர்ந்த அனைவரையும் மறு அறிவித்தல் வரை முகாம்களுக்குள் இருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கம்பஹா, மினுவாங்கொடபகுதியைச்சேர்ந்த 39 வயதான பெண்ணுக்கு கொரோனா இருப்பது நேற்றுமுன்தினம் நள்ளிரவு கண்டுபிடிக்கப்பட்டது. இலங்கையில் சுமார் 2 மாதங்களின் பின்னர் அடையாளப்படுத்தப்பட்ட சமூகத்தொற்று இதுவாகும். இந்த நிலையிலேயே படையினருக்கு இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இலங்கையில் இறுதியாக சமூகத்தொற்று இருந்த காலப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட கடற்படையினரிடையே இந்தத் தொற்று தீவிரமாகப் பரவியிருந்தமையே அடுத்தே இம்முறை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## கொரோனாவின் தீவிரத்தை அனைவரும் புரியவேண்டும்

### நாமல் ராஜபக்ச எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 5
மினுவங்கொடை மற்றும் திவுலப்பிட்டிய பகுதிகளில் பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையினால் ஒவ்வொரு இலங்கையர்களும் கொரோனாத் தொற்றின் தீவிரத்தை புரிந்துகொள்ள வேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது ருவீற்றரில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நிலமையைப் புரிந்துகொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை பொதுமக்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். தயவுசெய்து பீதியடைய வேண்டாம், சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுங்கள் என்று பதிவிட்டுள்ளார். (ம-இ)

## துப்பாக்கிகளுடன் சந்தேகநபர் கைது

வவுனியா,ஒக்.5
வவுனியா பன்றிகெய்த குளத்தில் விலங்குகளை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்படும் சட்டவிரோத துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீடொன்றில் சட்ட விரோதமாக துப்பாக்கிகள் (இடியன் துவக்கு) மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக, ஓமந்தை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப் பட்டது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அங்கு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில், நான்கு சட்டவிரோத துப்பாக்கிகள் மீட்கப்பட்டன. அவற்றைத் தமது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-110)

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

## உதயன் பயிற்சிப் பரீட்சை – 1

ஆக்கம்: திருமதி தயானந்தி சதீஸ்வரன்
(B.Sc)

நேரம்: 1 மணி 45 நிமிடம் பெயர்: ............................ பாடசாலை: ..................................

மிகப் பொருத்தமான விடையைத் தெரிக

1. இயற்கையான பதியமுறை இனப்பெருக்கமாக அமைவது
1. பதிவைத்தல் 2. ஒட்டுதல் 3. இழையவளப்பு 4.ஓடிமூலம் இனப்பெருக்கம்.

2. குருதியில் அதிகளவில் காணப்படும் கலவகை
1.செங்குழியம் 2. வெண்குழியம் 3. குருதிச்சிறுதட்டு 4. ஒற்றைகுழியம்

3. மனித ஓமோனின் இயல்பு
1. நரம்பு இயைபாக்கத்திற்கு உதவுவது
2. கான்கள் மூலம் கடத்தப்படுகிறது
3. தொழிற்படுவதற்கு மிகக் குறைந்த செறிவு போதுமானது
4. அசேதனச் சேர்வைகளாகும்

4. மனித மூளையின் தொழிற்பாடுகளில் மூளியினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடு
1. உடற்சமநிலையைப் பேணும்
2. இச்சை வழித் தசைச் சுருக்கத்தை கட்டுப்படுத்தும்
3. உயர்மட்ட சிந்தனை
4. வாங்கிகளில் இருந்து வரும் கணத்தாக்கங்களைப் பெறல்

5. கலம் ஒன்றிலுள்ள புன்னங்கத்தின் தொழிற்பாட்டை சரியாகக் காட்டுவது
1. கரு - சக்தி உற்பத்தி
2. இழைமணி- புரதத் தொகுப்பு
3. பச்சையவுருமணி - கலச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல்
4. கொல்கியுடன்- விநியோகித்தல்

6. வெடித்தற் பொறிமுறை மூலம் பரம்பலடையும் வித்து
1. வெண்டி 2. எண்ணெய் 3. பாகல் 4. கத்தரி

7. மனிதனின் உடற்கலமொன்றில் காணப்படும் நிறமூர்த்தங்களில் தன்நிற மூர்த்தங்களின் எண்ணிக்கை
1. 23 சோடி 2. 22 சோடி 3. 1 சோடி 4. 42 சோடி

8.சிறுநீரகக் கற்களுக்குக் காரணமான இரசாயனப் பதார்த்தம்
1. கல்சியம் ஒட்சலேற்று 2. கல்சியம் ஒட்சைட்டு
3. கல்சியம் காபனேற்று 4. கல்சியம் சல்பேற்று

9. காழ்கலனின் சுவரில் படிவடையும் பதார்த்தம்
1. பெக்ரின் 2. இலிக்னின் 3. செலுலோசு 4. அரைச்செலுலோசு

10. A. நீண்ட உருளை வடிவான கலம்
B. கிளை கொண்டது
C. அதிகளவான இழைமணிகளைக் கொண்டது
D. வரி கொண்டது
இவற்றில் இதயத்தசைக்கும் வன்கூட்டுத் தசைக்கும் பொதுவான இயல்பாக அமையக் கூடியது.
1. A,B,C 2.B,C,D 3. C,D 4. B,C,D

11. அனலிடாவான் இயல்பாகக் கருதக் கூடியது
1. உடற்பிரிவுகள் தகமாக்களை தோற்றுவிக்கும்
2. மூன்று மூலவுயிர்ப்படைகளைக் கொண்டது
3. ஆரைச்சமச்சீரான உடலமைப்பைக் கொண்டது
4. வித்தி மூலம் இனம் பெருகும்.

12. நொதியம் பற்றிய தவறான கூற்று
1. புரதங்கள் யாவும் நொதியங்களால் ஆனது
2. அங்கிகளின் உடலினுள் உற்பத்தி செய்யப்படும்
3. உயிர் இரசாயன தாக்கவீதத்தை அதிகரிக்க உதவும்
4. விசேட வகைப் புரதங்கள் ஆகும்

13.நியூக்கிளிக்கமிலத்தின் ஆக்க அலகான நியூக்கிளியோரைட்டு ஆக்கப்பட்ட மூலங்களை சரியாகக் காட்டுவது
1. C, H, O 2. C,H,O,N 3. C,H,O,N,P4 4. C,H,O,N,P,S

16. 20g ca மூலகத்தில் உள்ள அணுக்களின் எண்ணிக்கை
(Ca = 40)
1.$6.022 \times 10^{23}$ 2. $2 \times 6.022 \times 10^{23}$
3. $0.5 \times 6.022 \times 10^{23}$ 4. $20 \times 6.022 \times 10^{23}$

17. கதோட்டு பாதுகாப்பு முறையாக அமையாதது
1. இரும்பின் மீது Zn பூச்சியிடுதல்
2. இரும்பின் மீது மக்னீசியம் ஒட்டுதல்
3. இரும்பின் மீது AL ஒட்டுதல்
4. இரும்பின் மீது வெள்ளி பூசுதல்

18. P எனும் மூலகம் காபனேற்றுடன் $PCO_3$ எனும் சேர்வையை உருவாக்குகிறது எனின் P யின் வலுவளவு
1. 1 2. 2 3.3 4. 4

19.ஐதான அமிலம் சமிக்கப்பட்ட நீர்க் கரைசலை மின்பகுக்கும்போது அனோட்டில் வெளிவரும் வாயு
1. $H_{2(g)}$ 2. $O_{2(g)}$ 3. $N_{2(g)}$ 4. $H_2O_{(g)}$

20. பின்வருவனவற்றில் K+ இன் இலத்திரன் எண்ணிக்கை சமமான இலத்திரன் எண்ணிக்கை கொண்ட மூலகம்
1.He 2. Ne 3. N 4. S

21. தரப்பட்டவற்றில் மின் எதிர்தன்மை
1. O 2. Cl 3. N 4. S

22. உப்பு உற்பத்தியின் போது 1ஆவது பாத்தியில் வீழ்படிவாவது
1. கல்சியம் காபனேற்று 2. கல்சியம் சல்பேற்று
3. மக்னீசியம் குளோரைட்டு 4. சோடியம் குளோரைட்டு


23. சேர்வையின் பின்வரும் இயல்புகளில்
1. அயன் சாலகமானது
2. உயர் உருகுநிலை கொண்டது
3. உருகிய நிலையில் மின்னைக் கடத்தும்
இவ்வியல்புகளைக் கொண்ட சேர்வை
1. H2O 2. $NH_3$ 3. $CO_2$ 4. $Mgcl_2$

24.$P^H$ தாளில் வன்னமிலத்தின் நிறமாக அமையக் கூடியது
1. ஊதா 2. சிவப்பு 3. பச்சை 4. நீலம்

25. குளவி கொட்டிய இடத்தில் பூசக்கூடிய பதார்த்தம் கொண்டிருக்க வேண்டியது
1. மூல இயல்பு 2. அமில இயல்பு 3. நடுநிலைத் தன்மை 4. மென்மூல இயல்பு

26. சேதன இரசாயனத்தில் தாழ்த்தியாக பயன்படும் மூலகம்
1. Na 2. S 3. O 4. B

27. நீச்சல் தடாகம் ஒன்றின் தோற்ற ஆழம் 15cm நீரின் முறிவுச் சுட்டி 4/3 எனின் நீச்சல் தடாகத்தின் உண்மை ஆழம் யாது?
1. 20cm 2. 9cm 3. 30cm 4.36cm

28. 



5kg பொருளின் மீது எதிர் எதிர் திசைகளில் இரு விசைகள் நேர்கோட்டில் தொழிற்படும்போது பொருளின் ஆர்முடுகல் யாது?
1. $2ms^{-2}$ 2. $4ms^{-2}$ 3. $8ms^{-2}$ 4. $12ms^{-2}$

29. கப்பலிலிருந்து கடலின் அடிக்கு அனுப்பப்பட்ட ஒலியலை தெறிப்படைந்து வருவதற்கு 6S எடுத்தது எனின் கடலின் ஆழம் யாது (நீரின் ஒலியின் வேகம் 1440mls
1. 432m 2. 43200 m 3. 4320m 4. 2880 m

30.மின் அழுத்தி ஒன்றினூடாக 5.A மின்னோட்டம் பாயும்போது அதன் மின் அழுத்த வித்தியாசம் 12V ஆக காணப்படுகின்றது. இம்மின்னமுத்தி 15 நிமிடம் தொழிற்படும்போது செலவாகும் மின்சக்தி யாது?
1. 54000J 2. 540J 3. 54J 4. 5.4J

31. மின்மானியிலிருந்து வெளிவரும் உயிர்க்கம்பியும் நடுநிலைக்கம்பியும் அடுத்து எவ் துணைக்கூறுடன் இணைபடும்
1. இடறுஆளி 2. பிரதான ஆளி 3. ஆளி 4. பரம்பல்பெட்டி

32. கழியொலியின் பயனாக அமையாதது
1. கடலின் ஆழத்தை அழிப்பதற்கு
2. காணாமல் போன கப்பல் சிதைவுகளை
3. கருப்பையில் இருக்கும் சிசுவை அவதானிக்க
4. இரவுநேரக் கமராக்களில் பயன்படும்.

33. 


இச்சுற்றினூடாக பாயும் மின்னோட்டம்

1. 1A 2. 0.8A 3. 2A 4. 0.5A

34. நீர்த்தாங்கி ஒன்று 20m உயரத்தில் 500g நீருடன் காணப்படும்போது அழுத்த சக்தி யாது?

1. $\frac{500}{1000} \times 20 \times 10$ J
2. 500 x 20 x 10 J
3. 50 x 20 x 10 J
4. 20 x 10 J

35.





இவ்வாகனம் சென்ற தூரம் யாது?

1. 25m 2. 50 m 3. 75m 4. 100m

36. ஒரு பொருளின் மூலம் இடம்பெயர்க்கப்படும் பாய்மத்தின் நிறை பொருளின் நிறைக்கு சமமாக இருக்கும் சந்தர்ப்பம்




1. A 2. B 3. C 4. D




37. 1m நீளமான கோலில் x அளவு யாது?

1. 1m 2. 50cm 3. 75cm 4. 25cm

38. அலையிக்கமொன்றில் பங்குபற்றும் துணிக்கைகளின் சமநிலைத்தானத்திலிருந்தான உச்ச இடப்பெயர்ச்சி.

1. வீச்சம் 2. அலைநீளம் 3. ஆவர்த்தனம் 4. மீடிறன்

39. ஒலியின் சிறப்பியல்பு


1. சுருதி 2. உரப்பு 3. பண்பு 4. மேற்கூறிய யாவும் சரி.

40. இலத்திரனியல் கழிவுகளாக கையடக்க தொலைபேசி மூலம் விடுவிக்கப்படும் உலோகம்

1. கட்மியம் 2. ஆசனிக்கு 3. ஈயம் 4. இரசம்

பகுதி II A

1) A.




வளிமண்டல காபனீரொட்சைட்டின் செறிவு காலத்துடன் மாறும் விதம் வரைபில் காட்டப்பட்டுள்ளது.

1. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரிப்பதற்கான மனித செயற்பாடுகள் 2 தருக.

2. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் அதிகரிப்பதனால் புவியில் ஏற்படும் நேரடி விளைவு யாது?

3. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிடுக.

4. சூழற்தொகுதியில் காபன் பதிக்கப்படும் பிரதான செயன்முறை எது?

5. வினா (4) இல் குறிப்பிட்ட செயன்முறையின் மூலப்பொருட்கள் எவை?


B. நீர்நிலைகளில் விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் சேரும்போது அல்கா வளர்ச்சி அடைதல் இடம்பெறுகின்றது. இதனால் நீர் துர்நாற்றம் வீசும் நிலையை அடைகிறது.


1. இச் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்.
2. அல்கா வளர்தலுக்கு காரணமான இரசாயன அயன்கள் எவை?
3. நீரின் துர்நாற்றத்திற்கு காரணமான வாயு ஒன்றைக் குறிப்பிடுக
4. நீர்மேற்பரப்பில் அல்காக்கள் வளர்தல் உயிர்ப்பல்வகைமை இழப்பிற்கு எவ்வாறு காரணமாகின்றது.

5. மனித வாழ்க்கைக் கோலத்தில் ஏற்படும் மாற்றத்தினால் ஏற்படும் தொற்றா நோய்கள் 2 தருக.

2)

A. மனித இதயத்தின் கட்டமைப்பு உருவில் காணப்படுகின்றது.



1. இருகடர்வால்வின் அமைவிடத்தை தருக?
2. இடது இதயவறை சுருக்கத்தின்போது குருதியானது என் குருதித் கலனினூடாகப் பாய்கின்றது?
3. முடியுரு நாடியில் கொலஸ்ரோல் படிவதனால் ஏற்படும் நோய் நிலைமை எது?
4. 


இவ் மின் இதயவரையில் ABC யினால் குறிப்பிடப்படும் இதய செயற்பாடு யாது?

5. குருதித் திரவவிழையத்தில் காணப்படும் பதார்த்தங்கள் 3 தருக.

B. மனித உடலில் குருதியைக் கொண்டு செல்லும் குருதிக் கலன்கள் நாடிகள், நாளங்கள் ஆகியன அமைப்பிலும் செயற்பாட்டிலும் வேறுபாடு கொண்டன.

1. இதயத்திலிருந்து குரதியை அப்பால் கொண்டு செல்லும் குருதிக்கலன்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
2. நாடி, நாளம் ஆகிய குருதிக் கலன்களுக்கிடையிலான கட்டமைப்பு வேறுபாடுகள் 2 தருக.
3. நாடியில் உள்ள எக்கட்டமைப்பு வேறுபாறு காரணமாக உயர் குருதியமுக்கம் உருவாகின்றது?
4. ஒட்சியேற்றப்பட்ட குருதி காணப்படும் குருதிக் கலன் ஒன்றைத் தருக.
5. காயமேற்படும்போது குருதி உறைதல் செயற்பாடு பாதுகாப்பான செயலாகும். குருதி உறைதலில் முக்கிய பங்காற்றும் குருதிச் சிறு துணிக்கை எது?

3)




A, B, C, D, E ஆகிய பரிசோதனைக் குழாய்களில் சில உலோக மூலகங்கள் இடமப்பட்டு சமஅளவு ஐ HCL அமிலம் பதிவு செய்யப்பட்டன.

| மூலகம் | அவதானம் |
|---|---|
| A | மெதுவாக வாயுக்குமிழி வெளியேறுயது |
| B | வேகமாக வாயுக்குமிழி வெளியேறியது |
| C | அவதானம் எதுவும் இல்லை |
| D | வேகமாக வாயுக்குமி வெளியேறியது |
| E | அவதானம் எதுவும் இல்லை. |

1. B, D ஆக அமையத்தக்க உலோக மூலகங்கள் எவை?


B -

D-

2. E ஆக அமையக் கூடிய உலோக மூலகம் எது?

3. இவற்றின் தாக்க வீதத்திற்கமைய இம்மூலகங்களை ஏறுவரிசைப்படுத்துக.

4. மூலகம் D யானது HCl உடன் காட்டும் தாக்கத்திற்கான இரசாயன சமன்பாட்டை எழுதுக.




5. இங்கு தோன்றும் வாயுவை எவ்வாறு இனங்காண முடியும்?

B. ஐதரசன் பரவொட்சைட் கரைசல்

1. தாக்கவீதத்தில் செல்வாக்கு செலுத்தும் எக்காரணியை அறிய இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது?


2. எப்பரிசோதனைக் குழாயில் அதிகளவு வாயுக்குமிழிகள் வெளியேறும்

3. இங்கு உருவாகும் வாயு எது?

4. இங்கு $Mno_2$ இன் தொழிற்பாடு யாது?

4)


A.



திரான்சிஸ்ரரின் தொழிற்பாட்டை அறிவதற்கு காட்டப்பட்ட அமைப்பு தயார்ப்படுத்தப்பட்டது.

1. இங்கு காட்டப்பட்ட திரான்சிஸ்ரர் எவ்வகையானது
2. ஆனி S1 ஐ மட்டும் மூடும்போது ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
3. ஆளி S2 மட்டும் மூடும்போது ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
4. ஆளி S1 ஐயும் ஆளி S2 ஐயும் ஒரே நேரத்தில் மூடும் போது ஒளிரும் மின்குமிழ்களின் பிரகாசம் தொடர்பாக யாது கூறுவீர்
5. இச்செயற்பாட்டிலிருந்து திரான்சிஸ்ரரின் தொழிற்பாட்டை தருக.

B.



1. p.n குறை கடத்தியில் காணப்படும் ஏற்றங்கள் எவை?

P -  n -


2. படத்திலுள்ள இரு வாயியில் அனோட்டு கதோட்டு என்பவற்றைக் குறிக்குக.

3. இச்சாற்றில் மின்குமிழினூடாக மின்னோட்டம் பாயுமா?
4. காரணம் யாது?

**பகுதி II B**


5) முள்ளந்தண்டுகளின் எல்லா மேற்பரப்புகளும் மேலணி இழையத்தினால் படலிடப்பட்டுள்ளது.

A.



1. மேலணியிழையம் காணப்படும் அமைவிடங்கள் 2 தருக.
2. மேலணியிழையத்தின் இயல்பு ஒன்றைக் குறிப்பிடுக.
3. சுரத்தல் தொழிலை மேற்கொள்ளும் மேலணியிழையத்தினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடு ஒன்றைக் குறிப்பிடுக.
4. மனித உடலில் உள்ள தொடுப்பிழையம் ஒன்றைக் குறிப்பிடுக.
5. மேலணி இழையத்திற்கும் தொடுப்பிழையத்திற்கும் இடையிலான வேறுபாடு ஒன்றைத் தருக.

B. முண்ணானினூடாக நரம்பு கணத்தாக்கம் ஊடுகடத்தப்படும் பாதை உருவில் காணப்படுகிறது.




1. X,Y என்பவற்றை இனங்காண்க.
2. தெறிவினை என்பது யாது?
3. தெறிவில்லில் காணப்படும் மூன்று நரம்புக் கலங்களையும் பெயரிடுக.
4. கணத்தாக்கம் கடத்தப்படும் பாதையை அம்புக்குறியின் உதவியுடன் தருக.
5. முண்ணான் நரம்புகள் எத்தனை?

6) A. ஆய்வுகூடத்தில் 0.5 mol $dm^{-3}$ செறிவுடைய 250$cm^3$ NaoH (aq) நியமக் கரைசல் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனின்

1. நியமக் கரைசல் தயாரிப்பதற்குத் தேவையான கண்ணாடி உபகரணங்கள் மூன்றைப் பெயரிடுக.
2. 0.5 mol $dm^{-3}$ செறிவுடைய 250 $cm^3$ NaoH கரைசல் தயாரிப்பதற்குத் தேவையான NaOH இன் திணிவு யாது? (Na - 23, 0-16, H-1)
3. செறிவு என்பதனை வரையறுக்குக.
4. NaOH இன் திணிவை அளந்தெடுப்பதற்கு ஆய்வுகூடத்தில் பயன்படுத்தத் தக்க உபகரணம் எது?
5. நியமக் கரைசல் தயாரிப்பின்போது கழுவுபோத்தலின் பயன்பாட்டை குறிப்பிடுக.

B. கலவையிலிருந்து கூறுகளைப் பிரித்தெடுக்கும் நுட்பமுறைகள் ஒவ்வொரு மாணவர் குழுவும் தனித்தனியாக வழங்கப்பட்டது.


குழு A மாசுக்களடங்கிய செப்பு சல்பேற்று பளிங்குகளில் இருந்து சுய செப்பு சல்பேற்று பளிங்குகளை வேறாக்குதல்

குழு B அரிசியிலிருந்து பதரை வேறாக்கல்

குழு C கிணற்று நீரிலிருந்து காய்ச்சி வடிக்கப்பட்ட நீரைப் பெறல்.


1. குழு A,B,C மேற்கொண்ட பிரித்தெடுப்பு நுட்பமுறைகளை தனித்தனியே பெயரிடுக.
2. குழு B பிரித்தெடுக்கும் நுட்பமுறையில் பாவிக்கப்படும் பௌதீக இயல்பு எது?
3. கிணற்று நீரிலிருந்து காய்ச்சி வடிக்கப்பட்ட நீரைப் பெறும்போது ஆவியாகும் கூறு, எஞ்சும் கூறுகளை தருக.
4. குழு C இன் பிரித்தெடுப்பு நுட்பமுறையில் ஆவி நிலையிலுள்ள கூறை ஒடுக்குவதற்கு பயன்படுத்தும் உபகரணத்தின் பெயர் யாது?
5. மேலே 3 குழுக்களிலும் அன்றாட வாழ்வில் பெரிதும் பயன்படுத்தும் பிரித்தெடுப்பு முறையாக எது அமையும்?

7) A. ஊடகம் 1 இலிருந்து ஊடகம் 2 இற்கு ஒளி செல்லும் சந்தர்ப்பம் காட்டப்பட்டுள்ளது.




1. இவ்வூடகங்களில் அடர்ந்த ஊடகம் எது?
2. படுகோணம் X ஆனது எப்பெயரால் அழைக்கப்படும்
3. படுகோணத்தை மேலும் அதிகரிக்கும்போது முறிகதிரின் நடத்தை தொடர்பாக யாது கூறுவீர்?
4. வினா (3) இல் கூறிய தோற்றப்பாடு எவ்வாறு அழைக்கப்படும்.
5. ஒளிமுறிவு விதிகளில் சினேலின் விதியை தருக.

B.




விளையுள் விசையை வாய்ப்பு பார்க்கும் பரிசோதனை அமைப்பு காட்டப்பட்டுள்ளது. 2kg பொருளானது x,y விற்றராசுகளில் இணைக்கப்பட்டுள்ளது.

1. X,Y என்பவற்றில் 20N, 20 N நிறைகள் தொங்கவிடப்படும்போது பொருள் எத்திசையில் இயங்கும்?
2. X,Y என்பவற்றில் முறையே 40N, 20N நிறைகள் காணப்படும்போது பொருள் எத்திசையில் இயங்கும்?
3. வினா (2) இல் கூறிய சந்தர்ப்பத்தில் விளையுள் விசை யாது?
4. பொருளின் ஆர்முடுகலைக் கணிக்குக.

8) A. கிரகர் மெண்டல் தோட்டப் பட்டாணித் தாவரத்தைப் பயன்படுத்தி தலைமுறையுரிமை தொடர்பாக செய்த பரிசோதனையில்

F1 சந்ததி அனைத்தும் சிவப்பு நிறப் பூக்களை உடைய தாவரங்களாக பெறப்பட்டது.
F2 சந்ததியில் சிவப்பு: வெள்ளை 755: 248 எனும் விகிதமாக பூக்கள் பெறப்பட்டது.

1. இப்பரிசோதனையில் பயன்படுத்திய உறள் பொருள் இயல்புகள் எவை?
2. ஆட்சியான இயல்பு எது?
3. அதனை எவ்வாறு இனங்கண்டீர்?
4. F1 சந்ததியின் ஒற்றைக் கலப்பு பிறப்பாக்கத்தின்போது இயல்புகள் எவ்வாறு தலைமுறையுரிமை அடைகின்றன என்பதை வரிப்படம் ஒன்றில் காட்டுக்.
5. சந்ததி இயல்புகள் தலைமுறையுரிமை அடையும்போது மெண்டலின் கோலங்களிலிருந்து வேறுபடும் சந்தர்ப்பத்தை குறிப்பிடுக.


B.




சமஅளவான கறுப்புத்தாள், அலுமினியத்தாள் சுற்றப்பட்ட 2 பாத்திரங்களில் நீர் இடப்பட்டு சூரியஒளியில் சில மணித்தியாலங்கள் வைக்கப்பட்டன.


1. எப்பாத்திரத்திலுள்ள வெப்பமானியின் வாசிப்பு உயர்வாக காணப்படும்?
2. வெப்பக்கதிர்ப்பு தெறிப்பு அதிகமாகும் மேற்பரப்பின் நிறம் யாது?
4. அன்றாட வாழ்வில் வெப்பக்கதிர்ப்பு பற்றி கவனிக்க வேண்டிய சந்தர்ப்பம் 1 தருக.
5. எதிர்ப்பு தவிர்ந்த வெப்பம் இடம்மாறும் வேறுமுறைகள் 2 தருக.

9) A. சில மூலக அணுக்களின் இலத்திரன் நிலையமைப்புப் படம் காட்டப்பட்டுள்ளது. X,Y,Z என்பன அணுக்களின் நியமக் குறியீடுகள் அல்ல.




1. Y இன் வலுவளவு யாது?
2. நேரயனை உருவாக்கக் கூடிய அணு எது?
3. Z2 ஆனது உருவாகும்போது தோன்றும் பிணைப்பு வகை எது?
4. X,Y,Z அணுக்களை இனங்காண்க.
5. X,Y ஆகிய அணுக்கள் இணைந்து உருவாகும் சேர்வையின் சாத்திரம் யாது?

B)




1. காட்டப்பட்ட சுற்றை இனங்காண்க
2. X,Y இல் வழங்கத்தக்க மின்னோட்ட வகை எது?
3. P ழ வில் பெறத்தக்க மின்னோட்ட வகை எது?
4. இச்சுற்றில் 4 இருவாயிகள் பயன்படுத்துவதன் அனுகூலம் யாது?
5. பயப்பு அபத்தத்தை சீராக்க முச்சுற்றில் இணைக்க வேண்டிய உபகரண எது?

பேராயரின் விமர்சன எதிரொலி;

# சி.ஐ.டி.யின் உப பொலிஸ் மா அதிபருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஒக்.5

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உப பொலிஸ்மா அதிபர் நுவான் வெதசிங்க இடமாற்றம் செய்யப்பட்டு, மேல் மாகாணத்தின் வடக்குப் பகுதிக்கு உப பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். மேல் மாகாணத்தின் வடக்குப் பகுதியில் உப பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய பிரசாத் ரணசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உப பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக குற்றவியல் புலனாய்வுத் துறை நடத்திய விசாரணைகள் குறித்து நேற்றுமுன்தினம் பேராயர் கார்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கவலை தெரிவித்திருந்தார். குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கடும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு கைது செய்யப்பட்ட ரிஷாத் பதியூதீனின் சகோதரர் திடீரென விடுதலை செய்யப்பட்டுள்ளமைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். விடுதலையின் பின்னணியில் அரசியல் ரீதியான இரகசிய ஒப்பந்தம் இருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் பேராயர் கூறினார். விடுதலை செய்யப்பட்டுள்ள நபர் தொடர்பில் ஆரம்பத்தில் கூறப்பட்ட விடயங்களுக்கும் தற்போது கூறப்படும் விடயங்களுக்குமிடையில் வேறுபாடுகள் உள்ளன. இவர் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறிய தகவல்கள் தம்மிடம் உள்ளதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினரின் செயற்பாடுகளில் முரண்பாடான நிலைமை காணப்படுவதாகவும் பேராயர் கூறியிருந்தார். இந்த நிலையிலேயே நுவான் வெதசிங்க திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(ப)

---

## 6ஆம் மாத நினைவலைகள்

அன்னை மடியில்
16 . 03 . 1970

அம்பாள் அரவணைப்பில்
05 . 04 . 2020



### சண்முகராசா செந்தூரன்

காற்றில் அலைந்தாடும் தீபங்களாய் நாம்
மூவரும் இங்கிருக்க
காலனவனை வெல்லச் செய்தவர்கள்
மமதையில் திளைத்திருக்க
எதற்கும் ஒரு தீர்வு உண்டென
உன்னவர்கள் நினைந்திருக்க
எல்லாம் முடிந்து விட்டதென நீங்கள்
கவலையுடன் உங்கிருக்க
அம்பாளை மௌனமாக்கியவர்களின் செயலை எண்ணி
அம்பாளை மனம் உருக வேண்டி நிற்கும்

துர்க்காபுரம்,
மல்லாகம்.

அன்பு மனைவி,
அன்பு செல்வங்கள்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நவமணியின் மடியில்
10 . 11 . 1935

சிவனின் அடியில்
05 . 10 . 2019

பரந்த கடலில் விளைந்த முத்துக்கு
முத்தான முதல்வர் எங்கள்

அமரர்
'திப்பு சுல்தான்' கலாபூசணம்

### T.S:லோகநாதன் J.P

(முன்னாள் CMR யாழ் மாநகரசபை
வண்ணை கலைவாணர்
நாடக மன்ற உறுப்பினர்)


உறவுகள்
கேசாவில் பிள்ளையார் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
22 . 11 . 1937

மறைவு
05 . 09 . 2020



### அமரர் பொன்னையா தம்பிராசா


கடந்த (05.09.2020) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பொன்னையா தம்பிராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (03.10.2020) சனிக் கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (05.10.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நகரசபை மண்டபம், மானிப்பாயில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐங்கரன் மோட்டேர்ஸ்,
ஐங்கரன் ஓட்டோஸ்

குடும்பத்தினர்.
உடுவில் றோட்,
மானிப்பாய்.

---

## மரண அறிவித்தல்



### சுப்பர் (யேசுதாஸ்) பாலசிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பவளஸ்தான் உடுவிலை வசிப்பிடமாகவும், நீக்லஸ் லேன், கச்சேரியடியில் தற்போது வசித்து வந்தவருமாகிய சுப்பர் (யேசுதாஸ்) பாலசிங்கம் நேற்று (04.10.2020) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சாமுவேல் லூசி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பியற்றிஸ் மகிழ்மலரின் அன்புக் கணவரும், சுபராஜ், சுகந்தராஜ், தயாளராஜ், ரவீந்திரராஜ், சுனித்ரா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிராணி, சாமுண்டீஸ்வரி, தர்சினி, சுதாஜினி கொலின் ஆகியோரின் அன்பு மாமனாரும், உமேஸ், வர்ணிக்கா, எழில்நிலா, றிசான், டினோஜன், ருக்சன், ஹுபேஸ், வினித், றொஸ்னி, டினோஜா தர்மிளன், மினோலினா, தரொலின்சன், ஜெறிக் ஜெனிபர், ஜெவ்றின் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஹன்சிகாவின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பொன்னம்மா, இரத்தினம், இராசையா பாக்கியம், நல்லம்மா, சண்முகராசா மற்றும் பரஞ்சோதி பரமராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பவளமலர் மற்றும் வோல்டர், இரஞ்சிதமலர், றெஜினோல்ட், சந்திரராஜா, நீற்றா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.10.2020) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீக்லஸ் வீதி கச்சேரியிலுள்ள இல்லத்தில் இடம்பெற்று, நல்லடக்கத்திற்காக உடுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்

---

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 07 . 1952

மறைவு
04 . 10 . 2020



### தேவசகாயம் செல்வநாயகம்

(பாதுகாப்பு உத்தியோகத்தர்-யாழ். பல்கலைக்கழகம்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் செல்வநாயகம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) நேற்று (04.10.2020) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம்-மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானமுத்து றீட்டம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மரிய கொறற்றியின் பாசமிகு கணவரும், றொனால்யஸ்மின் (பாதுகாப்பு உத்தியோகத்தர்- யாழ். பல்கலைக்கழகம்), ஆன்மேரியஸ்மின், காலஞ்சென்ற பீற்றர் யஸ்மின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்ரனி றபாயேலின் (யாழ். பல்கலைக்கழகம்) பாசமிகு மாமனாரும், ஆனந்தம், பரமநாயகம், சகாயநாயகி, காலஞ்சென்ற பேரின்பநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லூர்தம்மா, மரிய புஸ்பம், யசிந்தா, பூரண செல்வரஞ்சிதம் ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், வேதநாயகம் (புடவை வியாபாரி), அன்ரன் அமலதாஸ் (புடவை வியாபாரி), ஞானபுஸ்பம், காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம், யஸ்தஸ்சின்னப்பு ஆகியோரின் மைத்துனரும், லியோபயஸ், வைசிகா, ஆன்மேரி, பேல்டன் பிளேயர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லீனஸ், லைனஸ், லிபிந்தா ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், யனோறியாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.10.2020) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலய திருப்பலியின் பின்னர் புனித அந்தோனியார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் வீதி,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 8458 558, 077 0068 732 (மகன்)

# மக்களை முட்டாள்களாக்கும் இன்றைய அரசின் செயற்பாடு

## சஜித் காரசாரம்

கொழும்பு, ஒக். 5

ஈஸ்டர் தாக்குதலை இந்த அரசு, தனது அரசியல் சுயலாபத்துக்காகவே கடந்த காலங்களில் பயன்படுத்தியது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். மக்களை முட்டாள்களாக்க அரசு மேற்கொண்ட செயற்பாடாகவே இவற்றை நாம் கருதுகிறோம். இந்த நாடகத்தை நம்பி மக்கள் ஏமாற்றக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இது பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுத்தேர்தல் காலத்தின்போது, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக அதிகளவாக பேசப்பட்டது. இது தொடர்பாக பல்வேறு நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. ஈஸ்டர் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர்களுக்கு இந்த அரசு வழங்கப்போகும் தண்டனை என்ன? எம்மைப் பொறுத்தவரை அவர்கள் அனைவருக்கும் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

பொதுத் தேர்தல் காலத்தில், இந்த விவகாரத்தை அரசு தனது அரசியல் லாபத்துக்காகவே பயன்படுத்தியது. நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் சகோதரனை இந்த அரசு கைதுசெய்தது. ஆனால், இன்று அவருக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லாத காரணத்தால் அவரை விடுதலை செய்தது. அப்படியானால், பொதுத்தேர்தல் காலத்தின்போது கூறிய கதைகளுக்கு என்ன ஆனது? மக்களை முட்டாள்களாக்க அரசு மேற்கொண்ட செயற்பாடுகளாகவே இவற்றை நாம் கருதுகிறோம். இதிலிருந்தே அரசு, அரசியல் லாபத்துக்காக இந்த விடயத்தை பயன்படுத்தியது என்பது உறுதியாகியுள்ளது.

இன்று ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் குறித்து கவனம் செலுத்தாமல், ஜனநாயகத்தை அழிக்கும் 20 ஐ கொண்டுவரவே இந்த அரசு முயற்சி எடுக்கிறது. இது அரசியல் கண்ணாம்மூச்சி நாடகமாகும். இதற்கு மக்கள் எந்தக் காரணம் கொண்டும் ஏமாந்துவிடக்கூடாது, என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# துப்பாக்கி ரவைகளுடன் 4 பேர் கைதாகி விசாரணை

## கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவில் சம்பவம்

கொழும்பு, ஒக். 5

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்தெமுல்ல பகுதியில்

முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் வெவ்வேறு வகையான துப்பாக்கி ரவைகளுடன் சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகபபிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் 255, ஒன்பது மில்லிமீற்றர் அளவிலான துப்பாக்கிரவைகள் 4 மற்றும் மைக்ரோ ரக துப்பாக்கி ரவைகள் 3 ஆகியவை கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கி ரவைகளை சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்தாரென் சந்தேக நபர் ஒருவரும் அவருக்கு உதவி புரிந்த மேலும் மூன்று சந்தேக நபர்களுமாக நால்வரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முகத்துவாரம் மற்றும் இரத்மலானை பகுதிகளைச் சேர்ந்த 34, 38, 28 மற்றும் 44 வயதுடைய நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து இந்த தேடுதல் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# சூழல் மாசடைந்தால் சட்ட நடவடிக்கை

வவுனியா, ஒக். 5

ஓமந்தையில் பற்றரியிலிருந்து ஈயம் பிரித்தெடுக்கும் தொழிற்சாலையால் சூழல் மாசு ஏற்படுகின்றது என்று முறைப்பாடு கிடைத்துள்ளது. அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

(த-19)


LOLC FINANCE PLC

LOLC FINANCE

Gigantic Motor Vehicle Auction Sale

On Thursday 08th October 2020



TO BE HELD AT

NO. 363, MANNAR ROAD, VEPPANKULAM, VAVUNIYA.

Commencing 10.00 a.m Onwards

| | | | | |
|---|---|---|---|---|
| **BUS** | | | | |
| ASHOK LEYLAND VIKING | 6540CC | 2002 | GU | XXXX |
| **TRUCK** | | | | |
| MAHINDRA BOLERO MAXI | 2523CC | 2011 | PQ | XXXX |
| MAHINDRA MAXXIMO | 909CC | 2012 | PT | XXXX |
| TATA 207 RX PICKUP | 2956CC | 2014 | PY | XXXX |
| TATA ACE ZIP | 611CC | 2016 | DAF | XXXX |
| TATA ACE | 700CC | 2006 | LD | XXXX |
| TATA ACE | 702CC | 2010 | PP | XXXX |
| **CAR** | | | | |
| HYUNDAI ELANTRA | 1599CC | 1999 | GZ | XXXX |
| MARUTI ZEN ESTILO VXI | 998CC | 2010 | KK | XXXX |
| NISSAN SUNNY | 1295CC | 2002 | HF | XXXX |
| TOYOTA LN 130G | 2446CC | 1991 | 64 | XXXX |
| KIA CARENS | 1793CC | 2002 | JD | XXXX |
| TOYOTA AQUA | 1490CC | 2012 | CAJ | XXXX |
| **FOUR WHEEL TRACTOR** | | | | |
| HOLLAND 4710 | 2700CC | 2018 | RF | XXXX |
| JOHN DEERE 3036E | 1642CC | 2017 | RF | XXXX |
| JOHN DEERE 5203 | 2900CC | 2010 | RC | XXXX |
| KUBOTA L4508 | 2197CC | 2017 | RE | XXXX |
| KUBOTA L4508 | 2197CC | 2017 | RF | XXXX |
| MAHINDRA 575DI | 2730CC | 2016 | RE | XXXX |
| MAHINDRA GX 3600S | 1663CC | 2018 | RF | XXXX |
| MASSEY FERGUSON | 1498CC | 2016 | RF | XXXX |
| MILLAT MF240 | 2000CC | 2013 | RD | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2011 | RF | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2015 | RE | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2016 | RE | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2017 | RF | XXXX |
| MASSEY FERGUSON | 1498CC | 2017 | RF | XXXX |
| **VAN** | | | | |
| NISSAN CARAVAN | 2660CC | 1992 | 59 | XXXX |
| NISSAN VANETTE | 2180CC | 1998 | HK | XXXX |
| **LORRY** | | | | |
| ISUZU TKG-NPR85AN | 2990CC | 2014 | LO | XXXX |
| MAZDA SWARAJ | 3455CC | 1999 | 227 | XXXX |
| MITSUBISHI TKG-FBA20 | 2990CC | 2014 | LO | XXXX |
| MUDAN MD1043 | 4087CC | 2005 | LC | XXXX |
| TATA LIGHT | 3784CC | 2010 | LH | XXXX |
| TATA LPT 1613 | 5883CC | 2009 | LK | XXXX |
| **HARVESTER** | | | | |
| KUBOTA DC70G COMBINE HARVESTER | | | | |
| MUBOTA AC 70S COMBINE HARVESTER | | | | |
| MUBOTA AC 70S COMBINE HARVESTER | | | | |
| MUBOTA AC70S COMBINE HARVESTER | | | | |
| MUBOTA COMBINE HARVESTER - CLASSIC | | | | |
| MUBOTA AC 70S COMBINE HARVESTER | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **MOTOR BIKE** | | | | |
| BAJAJ DISCOVER | 125CC | 2013 | BAI | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2015 | BCL | XXXX |
| DEMAK DTM200 | 200CC | 2017 | BHC | XXXX |
| DEMAK CIVIC | 110CC | 2017 | BFX | XXXX |
| DEMAK DTM | 150CC | 2017 | BHC | XXXX |
| DEMAK DTM150 | 120CC | 2017 | BGQ | XXXX |
| DEMAK DTM150 | 150CC | 2017 | BGL | XXXX |
| DEMAK DZR 120 | 120CC | 2017 | BFP | XXXX |
| DEMAK EX90 | 90CC | 2017 | BGG | XXXX |
| DEMAK EX90 | 90CC | 2017 | BFY | XXXX |
| DEMAK EX90 | 90CC | 2017 | BHN | XXXX |
| DEMAK EX90 | 90CC | 2017 | BHP | XXXX |
| DEMAK EX90 | 90CC | 2017 | BHE | XXXX |
| DEMAK EXPLORER | 125CC | 2017 | BFO | XXXX |
| DEMAK EXPLORER | 125CC | 2017 | BHC | XXXX |
| DEMAK SAVAGE SUPRA | 120CC | 2016 | BGO | XXXX |
| DEMAK SAVAGE SUPRA | 120CC | 2016 | BHJ | XXXX |
| DEMAK SAVEGE | 100CC | 2015 | BHJ | XXXX |
| DEMAK SPARK | 90CC | 2017 | BHC | XXXX |
| DEMAK TROPICA | 125CC | 2016 | BHK | XXXX |
| DEMAK TROPIKA | 125CC | 2016 | BGH | XXXX |
| DEMAK WARRIOR | 150CC | 2017 | BHB | XXXX |
| GIXXER -GSX 150 | 150CC | 2016 | BEC | XXXX |
| HERO DASH VX | 110CC | 2017 | BEW | XXXX |
| HERO DASH | 110CC | 2015 | BDD | XXXX |
| HERO DASH | 110CC | 2017 | BEZ | XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2015 | BCM | XXXX |
| HERO HF DELUXE CAST SELF | 98CC | 2016 | BDM | XXXX |
| HERO HUNK | 150CC | 2014 | BBR | XXXX |
| HONDA DIO | 100CC | 2011 | BAV | XXXX |
| HONDA DIO | 110CC | 2018 | BGH | XXXX |
| HONDA HORNET | 160CC | 2016 | BEP | XXXX |
| HONDA NAVI | 110CC | 2016 | BEZ | XXXX |
| MAHENDRA GASTO | 110CC | 2017 | BHC | XXXX |
| MAHENDRA ROCKSTAR | 110CC | 2018 | BHE | XXXX |
| MAHINDRA GUSTO | 110CC | 2017 | BGY | XXXX |
| MAHINDRA GUSTO | 125CC | 2016 | BFI | XXXX |
| MAHINDRA ROCK STAR | 110CC | 2017 | BFV | XXXX |
| MAHINDRA ROCKSTAR | 110CC | 2018 | BHF | XXXX |
| MAHINDRA RODEO UZO | 125CC | 2015 | BFQ | XXXX |
| MAHINDRA U 20 | 125CC | 2017 | BGM | XXXX |
| SUZUKI GIXXER GSX150 | 150CC | 2016 | BEU | XXXX |
| TVS APACHE | 150CC | 2018 | BGO | XXXX |
| TVS METRO | 100CC | 2016 | BEM | XXXX |
| YAMAHA SALUTO | 125CC | 2017 | BGH | XXXX |
| **TRAILER** | | | | |
| TRACTOR TRAILOR | | 2017 | RY | XXXX |
| **TIPPER** | | | | |
| ASHOK LEYLAND | 6540CC | 2006 | LB | XXXX |
| **THREE WHEELER** | | | | |
| ALFA PLUS LOAD CARRIER | 436CC | 2018 | QY | XXXX |
| BAJAJ | 198CC | 2010 | YI | XXXX |

SALVAGES

| | | | |
|---|---|---|---|
| **CAR** | | | |
| MARUTI ALTO | 2011 | KL | XXXX |
| **SINGLE CAB** | | | |
| BOLERO MAXI | 2012 | PS | XXXX |
| **LORRY** | | | |
| ASHOK LEYLAND | 2005 | LA | XXXX |
| JAC LORRY | 2013 | LL | XXXX |

On View – 06th, 07th October 2020

Between 9.00 a.m – 5.00 p.m

Conditions of Sale

- The Auction will be conducted in accordance with the strict guidelines issued by the Ministry of Health, adhering to COVID 19 protocol.
- On the view days, buyers will be taken batches for inspection.
- Prospective buyers will be taken on a first come first serve basis & limited as per the Health Ministry guidelines.
- Entrance on the day of auction By a non - refundable Ticket of Rs. 1000.00 and refundable deposit of Rs. 5,000.00
- Payment: Non-refundable initial deposit of 25% in Cash at the fall of the Hammer & Balance 75% & Removal latest by 3.00 pm Thursday 15th October 2020 to be paid to LOLC Finance PLC, No.27, 2nd Cross Street, Vavuniya.
- The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.
- The decision of the Auctioneer will be final.

SCHOKMAN & SAMERAWICKREME

*One Country. One Auctioneer. Celebrating 128 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
6A. Fairfield Gardens,Colombo 08
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

web:www.sandslanka.com

## IELTS / OL /AL

Spoken English
By: Mr.B.Ruban, BBA, Dip in Eng
Home Visits
more details: 077 978 5749

## வீடு வாடகைக்கு

இருபாலை - கோண்டாவில் வீதியில் பழனியாண்டவர் கோயில் அருகில் நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.

021 222 2143

## மணமகள் தேவை

யாழ் . இந்து குருகுலம் 1992 இல் பிறந்த அனுச / விருச்சிக ராசி 5' 6 ½" உயரம் உடைய மணமகனுக்கு அழகான நற்குண முடைய மணமகள் தேவை.
கொழும்பில் சொந்த வீடு உள்ளது.

077 906 1527

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம். கோப்பாய். இராசவீதியில் யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி வீதி. 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. ஒரு பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும். இராசவீதியில் இருந்து 60m தூரத்தில் காணி உள்ளது
(தரகர் தேவையில்லை)
நேரில் வரவும்.

077 468 3354, 076 221 2037

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம். ஊரெழு பொக்கன் வீதி, 18 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (பிரித்து கொடுக்கப்படும் 1 ½ பரப்பு பின் காணியின் விலை 1 பரப்பு 5லட்சம் றோட்டுடன் உள்ள காணி 1 பரப்பு 6 லட்சம்) தரகர் தேவையில்லை. நேரில் வரவும். பலாலி வீதியில் இருந்து 120m தூரத்தில் காணி உள்ளது.

077 468 3354, 076 221 2037

## வேலையாள் தேவை

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள பல்பொருள் வாணிபத்திற்கு பெண் வேலையாள் தேவை.
வயது எல்லை: 18 -25

077 836 8926,077 404 8772

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம். கோப்பாய்.
இராசவீதியில் கிருஸ்ண கோயில் சந்திக்கும். இராச வீதி சந்திக்கும் நடுவில் றோட்டுடன் 26 ½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
(1½ பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்)
(தரகர் தேவையில்லை)
நேரில் வரவும்.

077 468 3354, 076 221 2037

## நாகபூஷணி திருமண சேவை

மணமகன். மணமகள் அனைவருக்கும் பதிவு கட்டணங்கள் யாவும் இலவசம்
(04.10.2020 முதல் 11.10.2020 வரை)
நீங்கள் விரும்பும் உள்நாட்டு. வெளிநாட்டு மணமக்கள் ஏராளமாக உள்ளனர் மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.ஞாயிறும் திறந்திருக்கும்.
இல.5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306

## மன்னிப்பு கோரல்

இல.198.மடவலை வீதி, கட்டுகஸ்தோட்டை எனும் முகவரியில் அமைந்துள்ள ரோயல் லங்கா மருந்தகம் தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அதிகாரி களினால் தேடுதலுக்குட்படுத்தப்பட்ட போது அம்மருந்த கத்தில் வைத்தியரின் மாதிரிக்காக பொதி செய்யப்பட்ட மருந்துகளைகாட்சிப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் ஆகிய குற்றச்சாட்டுக் களுக்கு 2018.02.08 கண்டி நீதவான் நீதிமன்றின் முன்னிலையில் எமது நிறுவனம் முதற் தடவையிலேயே குற்றத்தினை ஒப்புக்கொண்டமையினால் ரூபா இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 250000/-) தண்டப்பணமாக நியமிக்கப் பட்டதுடன் இத்தகையதொரு குற்றம் மீண்டும் இடம்பெற இடமளிப்பதில்லையெனவும், இடம் பெற்ற தவறுக்கு இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்பு கோருவதாகவும் இத்தால் அறியத்தரு கின்றோம்.

**ரோயல் லங்கா மருந்தகம்,**
**கண்டி.**




## கேள்வி அறிவித்தல்
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.
## சபை நிதி - 2020

01. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

02. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 4/2016(ii) இற்கமைவாகவும் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் .மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

05. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் 05.10.2020 ஆம் திகதியிலிருந்து 16.10.2020 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 04.00 மணி வரையும், 19.10.2020 ஆம் திகதி காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 02.00 மணிக்கு இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 19.10.2020 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் 12.10.2020 ஆம் திகதியன்று பிற்பகல் 02.00 மணிக்கு நடைபெறும். இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

08. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/03 /C.F/W/20/2020 | Renovation of Kurukkal Road first Lane | 0.578 | 2 மாதம் | C9 and C8 (வீதி) | 10,000.00 | 04.01.2021 |
| NP/14/45(3)/PL/03 /C.F/W/21/2020 | Construction of Segregation Shed for Dumping Ground at Pulloppallai. | 2.009 | 3 மாதம் | C8 and C7 (கட்டுமானம்) | 40,000.00 | 18.01.2021 |
| NP/14/45(3)/PL/03 /C.F/W/22/2020 | Construction of Name Board for Roads | 1.048 | 2 மாதம் | C9 and C8 (வீதி) | 20,000.00 | 04.01.2021 |

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.**
**05.10.2020**

## பெறுகை அறிவித்தல்
## நகராட்சிமன்றம், சாவகச்சேரி

தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி அவர்களினால் 01.01.2021 ஆம் திகதி தொடக்கம் 31.12.2021 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் கீழ்வரும் சேவைகளை வழங்கு வதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/41(3)1/O.S /01 | பாதுகாப்புசேவை | 09 | 46,000.00 | 19.01.2021 |
| NP/14/41(3)1/O.S /02 | சுத்திகரிப்புசேவை | 12 | 61,500.00 | 02.02.2021 |
| NP/14/41(3)1/O.S /03 | சாரதி சேவை | 02 | 11,000.00 | 05.01.2021 |

01. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே இக் கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை, கருத்தில் கொள்ளப்படும்.

02. தனியார் சேவை வழங்குநர்கள் சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும். அத்துடன் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் இடம் பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம் , சாவகச்சேரி தொலைபேசி இல - 021 227 0498 தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல் chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் 05.10.2020 ஆம் திகதி தொடக்கம் 19.10.2020 ஆம் திகதி வரை 9.00 மணி முதல் 15.00 மணி வரை பெறுகை ஆவணங்களை பார்வையிடலாம்.

05. சேவை வழங்குநர்கள் நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நாட்களில் 05.10.2020 ஆம் திகதி தொடக்கம் 19.10.2020 ஆம் திகதி வரை மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக ரூபா 1,000.00 (VAT,NBT நீங்கலாக) இனைச் செலுத்தி 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெறுகை விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

06. பெறுகை ஆவணங்கள் 20.10.2020 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், நகராட்சிமன்றம் ,சாவகச்சேரி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைப் பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் எழுதப்படல் வேண்டும்.

08. பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

09. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 13.10.2020 ஆம் திகதி 10.00 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.

**திருமதி சிவமங்கை இராமநாதன்,**
**தலைவர், பெறுகைக்குழு,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**
**05.10.2020**

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

17ஆம் ஆண்டு நினைவு    1ஆம் ஆண்டு நினைவு



கணபதிப்பிள்ளை சிவபாதம்    சிவபாதம் சரஸ்வதி

தோற்றம் 29.06.1936    மறைவு 10.09.2003    தோற்றம் 17.05.1945    மறைவு 17.10.2019

அன்பின் திருவுருவே
எங்கள் பாசத்தின் உறைவிடங்களே
எத்தனை காலங்கள் போனாலும்
மறப்போமா உங்களை
எங்கள் மனதில் குடிகொண்ட தெய்வங்களே
உங்கள் அன்பு உருவங்கள் என்றும் மாறாது
எம் இதயத்தில் உங்கள் நினைவுகளை
சுமந்து வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

855, நாவலர் வீதி, அரியாலை.

குடும்பத்தினர்
077 132 6489

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 06 . 02 . 1950



விண்ணில் 17 . 10 . 2019

### பொன்னையா பத்மநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/கொக்குவில் நாமகள் வித்தியாலயம் )
திதி - சங்கடஹர சதுர்த்தி

இரு விழிகள் மூடி ஓராண்டு ஆனதுவோ
நேற்றுத்தான் நடந்தது போல் , தோன்றுதையா - உங்கள் இழப்பு
அழுதவிழி ஈரம் இன்னும் காயவில்லை
அப்பா என்ற வார்த்தையும் ஓயவில்லை

எங்கள் மூச்சும் பேச்சும் நீங்களப்பா
விதியும் எமக்குச் சதி செய்ததப்பா
இம் மண்ணில் நீங்கள் சாதிக்க நினைத்தவற்றை விண்ணிலிருந்து நிறைவேற்றி விட்டீரையா
செல்வமெல்லாம் திரண்டு வந்த வேளையிலே - அவசரமாய் காலனவன் கரம் பற்றியதேனய்யா
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் பணியின் சான்றுகள்தான் தோன்றுதையா
உங்கள் பணியை விட்டு நீங்கள் விண்ணுலகம் ஏகினாலும் உங்கள் மறைவின் ஓராண்டு
நிறை வினிலே என் பணி தொடருமென
மகன் கையில் உங்கள் பணியை ஒப்படைத்தீர்.
தெய்வமாய் நின்று எங்கள் குடும்பத்தை ஆசிர்வதித்திட வேண்டுகின்றோம்.

அன்னாரின், ஓராண்டு நிறைவையொட்டி இன்றைய தினம் ( 05.10.2020) திங்கட்கிழமையன்று எமது இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

நெசவுசாலை ஒழுங்கை,
இருபாலை வீதி, கோண்டாவில்.

உங்கள் பிரிவைத் தாங்காது ஏங்கித் தவிக்கும்
மனைவி, மக்கள் , மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவுகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



கடந்த 07.09.2020 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

### அமரர் தம்பிப்பிள்ளை பொன்னையா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (05.10.2020) திங்கட்கிழமை காலை 5.00 மணிக்கும், சபிண்டீகரண கிரியைகள் 07.10.2020 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்

கனகன்புளியடி சந்தி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
077 703 3476

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 04 . 1950



மறைவு 04 . 10 . 2020

### வேலுப்பிள்ளை முத்துராசா

(முன்னாள் கிளை முகாமையாளர்
தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்)

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முத்துராசா (முன்னாள் கிளை முகாமையாளர் தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்) நேற்று (04.10.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், கோவிந்தர் இராசமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், பூமணிதேவியின் அன்புக் கணவரும், துர்க்கா (மகளிர் விவகார அமைச்சு, கொழும்பு) சாம்பவி (சுமநல திணைக்களம், வேலணை) தேனுகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதாஸ் (திருமால் ஸ்ரோர்ஸ் கொழும்பு), தர்மேந்திரா (யாழ் தினக்குரல்), திவ்யா (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனும், செல்லமுத்து, நாகேஸ்வரி, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, மற்றும் அருளானந்தம், காலஞ்சென்றவர்களான நடேஸ்வரன், தயாளன் ஆகியோரின் உடன் பிறந்த அன்புச் சகோதரனும், நாகேந்திரம், தேவராசா, காலஞ்சென்ற பூபாலரத்தினம், மற்றும் புவனேஸ்வரி, மனோன்மணி, காலஞ்சென்ற மகேந்திரராசா, இராமமூர்த்தி, விக்கினேஸ்வரி, தவமலர், கலாரஞ்சினி, கலைச்செல்வி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற நாகரத்தினம், மற்றும் இராஜேஸ்வரி, பாண்டியர், பாலராஜன், ஆகியோரின் சகோதரனும் நிகர்ஷன், பிரனிஸ்கா, கிஷாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2020) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி.
021 205 7024, 077 977 3561

தகவல்:
குடும்பத்தினர்.

## தொற்றாளர்கள் ......

செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடும்பப் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவருடைய 16 வயது மகளும் நேற்று மாலை தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். இது அனைவரையும் பீதியடைய வைத்துள்ளது. எனினும், மக்கள் பீதியடையாமல் கொரோனாத் தடுப்புக்கான சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றி மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

பெண் மினுவாங்கொடைப் பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்தமையால் ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. அங்கு அவருடன் தொடர்புகளைப் பேணிய 400 பேரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

தொற்றாளர்கள் அதிகரித்தால் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படும். அந்தப் பெண்ணுடன் தொடர்பைப் பேணிய பணியாளர்கள் நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். எனினும், நாட்டை உடனே முடக்கமாட்டோம். தொற்றின் வீரியத்தையும் நாட்டின் நிலைமையையும் அவதானித்த பின்னரே ஊரடங்குச் சட்டத்தை நாடு முழுவதிலும் விரிவாக்குவது தொடர்பில் முடிவெடுப்போம்.

கொரோனா வைரஸ் பெரும் ஆபத்தானது. அதன் தீவிரத்தன்மை இலங்கையில் இன்னமும் குறையவில்லை. உலகின் வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தற்போது கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். எத்தனை பாதுகாப்பு அடுக்குகளைத் தாண்டி அவரைக் கொரோனா தங்கியிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள், என்றார். (ஓ,5,22)

## இந்திய அரசின் ......

வழங்கினாலும் இலங்கை அரசு ஒரு போதும் இந்தியாவுக்கு விசுவாசமாக இருக்கப் போவதில்லை. எவ்வளவு தான் இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்கினாலும், இலங்கை அரசு இந்தியாவைத் தமிழர் சார்பான நாடாகவே பார்க்கும். ஆகவே தமிழர் சார்பாக இந்தியா நடவடிக்கைகள் எடுப்பதை எவரும் பிழை கூறமுடியாது. இந்தியா துணிந்து நீதியை நிலைநாட்டலாம். நிலையான தீர்வைக் கொண்டு வரலாம். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசமைப்பின் 13வது திருத்தத்தின் இன்றைய நிலையும் இந்தியாவின் பங்கும் என்ற தலைப்பில் இந்தியாவின் சிந்தனை மையம் ஒன்று நேற்று ஞாயிறுக்கிழமை ஒழுங்கு செய்த இணையம் மூலமான கருத்தரங்கில் சிறப்புரை ஆற்றியபோதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

### அதிகாரமில்லை

போருக்குப் பின்னர் எமது மக்களின் துன்ப துயரங்களை நீக்கும் வகையில் செயற்படக்கூடிய ஒரு இடைக்கால ஏற்பாடாகக் கூட மாகாண சபை எமது மக்களுக்குப் பயன்படவில்லை என்பதும் பயன்படப்போவதில்லை என்பதுமே கசப்பான உண்மையாகும். எனது காலத்தில் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், நில அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் போன்ற கட்டமைப்பு மேலும் கலாசார ரீதியான இனப்படுகொலை செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் எதனையும் நாம் 13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ் கொண்டிருக்கவில்லை. சில நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக் கூடியதாக இருந்ததென்றால் மக்களின் ஒருங்கிணைந்த எதிர்ப்புக் குரலே அதற்குக் காரணமாக அமைந்தது.

ஆகவே, இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் இத்தனை குறைபாடுகளுடன் 13 ஆவது திருத்த சட்டம் ஏற்படுத்தப்பட்டமை இந்தியாவுக்கு தோல்வி இல்லையா என்பது சாதாரணமாக எழக்கூடிய ஒரு கேள்வி தான்.

அதற்கு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு சிலரால் தவறாக வழிநடத்தப்பட்டமையும் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன ராஜீவ் காந்தியை தனது சாணக்கியத்தால் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திருப்புவதில் வெற்றி கண்டமையும் முக்கிய காரணங்களாவன. இந்த இந்திய- இலங்கை ஒப்பந்த விடயத்தில் இந்தியா செய்த மிகப்பெரும் தவறு இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் ஒரு தரப்பாகக் கருதி செயற்படாமை ஆகும். அவ்வாறு தமிழ் மக்களை இந்த ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக இணைத்து இந்தியா செயற்பட்டிருந்தால் இன்று அது தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் பல்வேறு வழிகளிலும் அனுகூலமானதாக அமைந்திருந்திருக்கும். அதேபோல, அன்றைய உலக ஒழுங்கை மட்டும் கவனத்தில் கொண்டு இந்தியா இந்த விடயத்தில் காய்களை நகர்த்தியமை இலங்கை விடயத்தில் காலப்போக்கில் தவறுகளை சரி செய்வதற்கான சந்தர்ப்பங்களை இலகுபடுத்தவில்லை என்றும் கூறலாம். 1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது இருந்த பூகோள அரசியலும் பிராந்திய அரசியலும் சந்தித்த மாற்றங்கள் முன்னர் போல பெரிய அண்ணன் தோரணையில் இலங்கையைக் கையாளும் நிலைமையில் இந்தியாவுக்கு கடினத்தை ஏற்படுத்தின.

### இந்தியாவின் பயம்

தென்னிந்தியாவில் தமிழ் மொழி உரிமைக்காக முன்னர் நடைபெற்ற போராட்டங்களையும் இலங்கையில் திட்டமிட்ட இன அழிப்புக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டத்தையும் அதிகம் வேறுபடுத்தாமல் அவசியமற்றவகையில் அதீத எச்சரிக்கையுடன் இந்தியா செயற்பட்டமை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழான 13 ஆவது திருத்தச் சட்டத்தை அர்த்தமுள்ளதாக்குவதற்கு இந்தியா செயற்பட இடமளிக்கவில்லை. எங்கே இலங்கையின் வடக்கு கிழக்கு சுயநிர்ணயம் தமிழ் நாட்டின் பிரிவினைவாதக் கருத்துக்களுக்கு ஆதரவு அளித்து விடுமோ என்று அப்போது இந்தியா பயந்தது. மேலும் பின்னர் நடைபெற்ற சில கசப்பான சம்பவங்களும் இலங்கையில் தமிழ் மக்கள் பிரச்சினையில் காத்திரமான ஒரு வகிபாகத்தை இந்தியா வகிப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவில்லை.

### ஒற்றையாட்சி

இந்தியாவின் மாநில ஆட்சிக்கும் இலங்கையில் மாகாண ரீதியான ஆட்சிக்கும் எந்த அடிப்படையிலும் சமாந்திரம் வரைய முடியாது. இந்தியாவின் மாநிலங்களுக்குரிய சகல உரிமைகளும் எமது மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை இந்திய சட்ட நிபுணர்கள் அப்போது கொண்டிருந்த போதும் அவ்வாறு அது நடைபெற இலங்கை அரசு இடமளிக்கவில்லை. இரண்டு நாடுகளுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் இருக்கின்றன. இலங்கையின் ஒற்றை ஆட்சி கட்டமைப்பு வெறும் சட்ட ரீதியான பண்புகளைக் கொண்டதல்ல. அது சிங்கள பௌத்தர்களின் தனிப்பட்ட சித்தாந்தங்களில் தங்கியிருக்கின்றது. அது மகாவம்ச சிந்தனையால் செதுக்கப்பட்ட, வழிநடத்தப்படுகின்ற ஒரு சமூக சட்ட கட்டமைப்பாகும். மகாவம்ச மனநிலையின் கீழ் இலங்கையை பொறுத்தவரையில் இந்தியாவானது வரலாற்றுக்காலம் தொட்டு ஒரு எதிரி நாடாகவே பார்க்கப்படுகின்றது. ஆனால், மறுபுறத்தில் இன, மத, மொழி மற்றும் பண்பாட்டு ரீதியாக இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியாவை முற்றிலும் நேசிக்கின்றார்கள். ஆனால், இவற்றை சீர்தூக்கிப் பார்த்து இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்தியா இன்றுவரை தவறியுள்ளது. அன்னை இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின்னர் இலங்கை தொடர்பாக இந்திய வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவே இந்தச் சறுக்கல்கள் ஏற்பட்டன. அன்னை இந்திரா காந்தியின் பின்னர் தடங்காது முடிவெடுக்கும் ஒரு தலைமைத்துவம் இப்பொழுது தான் உதித்திருக்கின்றது.

### சமஷ்டிதான் வழி

என்னைப் பொறுத்தவரையில், 13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் பல உண்மைகளை இந்தியா புரிந்து கொண்டுள்ளது என்று நினைக்கிறேன். ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை ஏற்படுத்துவதே இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாகும் என்பது மோடி தலைமையிலான அரசுக்கு புரியாத ஒரு விடயம் அல்ல. மோடி தமது முதற் சந்திப்பிலேயே இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலங்கைக்கு ஒரு கூட்டுறவு சமஷ்டியே சிறந்தது என்று கூறியிருந்தார். ஆகவே எந்தளவுக்கு இந்தியாவின் தென் கோடியில் உள்ள இலங்கைத் தமிழ் மக்கள் அதிகாரத்தை பெற்று பாதுகாப்பாகவும் பலமாகவும் இருக்கின்றார்களோ அந்தளவுக்கு இந்தியாவுக்கும் அது பாதுகாப்பாக அமையும். என்பதை அவர் உணர்ந்திருந்தார். இதன் அடிப்படையிலான ஒரு அணுகுமுறையை மிகவும் துணிச்சலான முறையில் இந்தியா இனிவரும் காலங்களில் மேற்கொள்ளவேண்டும். கடந்த ஒரு வருடகாலமாக இந்தியாவின் உள்ளீடல் அவசியம் என்பதை நான் வலியுறுத்தி வந்துள்ளேன். இந்தியாவின் கவனம் எங்கள் பக்கம் திரும்பியுள்ளதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

### பூகோள அரசியல்

13 ஆவது திருத்த சட்டத்தில் எதுவும் இல்லை என்றும் இதனால் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியாது என்றும் நான் இங்கு விளக்கம் அளித்ததன் அர்த்தம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்கு இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இந்தியாவோ அல்லது இலங்கைத் தமிழ் மக்களோ பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்கவேண்டும் என்பது அல்ல. உண்மையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்வதன் மூலம் தமிழ் மக்களிடம் இருந்து எந்த ஒரு பாரதூரமான அதிகாரத்தையும் தாம் இல்லாமல் ஆக்கப்போவதில்லை என்பது அரசுக்கு நன்கு தெரியும். அப்படி இருந்தும் ஏன் அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் ஆக்குவதற்கு முயற்சிக்கின்றது என்றால், எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய அதிகார பகிர்வுக்கான சந்தர்ப்பங்கள் மற்றும் வாய்ப்புக்களை தற்போது அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கும் போதே அதனை இல்லாமல் செய்வதற்கான ஒரு அரசியல் யுக்தியாகத்தான் அதை நான் நோக்குகின்றேன். 13 ஆவது திருத்தச் சட்டத்தில் எதுவும் இல்லை என்ற போதிலும் அதில் ஒரு அரசியல் இருக்கிறது. அது பூகோள அரசியலுடன் தொடர்புபட்டது.

### சமஷ்டிக்கான கருவி

நான் முன்னர் கூறியதுபோல, 13 ஆவது திருத்தச் சட்டம் இந்திய - இலங்கை இரு தரப்பு உடன்படிக்கைக்கு உட்பட்டது. 13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமல் செய்வது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை சவாலுக்கு உட்படுத்துவதாக அமையும். இலங்கையில் தமிழ் மக்கள் ஒரு சமஷ்டி தீர்வை இந்தியாவின் உதவியுடன் வென்றெடுப்பதற்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு கருவியாக இருக்க முடியும் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்கமுடியாது. ஆகவே இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இறுதித் தீர்வான சமஷ்டி முறையை எட்டும் வரை, போரை முடிவுக்கு கொண்டுவர உதவிகளைப் பெறும்போது இலங்கை அரசு வழங்கிய '13ம் அதற்கு மேலாகவும்' என்ற வாக்குறுதிகளை செயற்படுத்த அது முன்வரவேண்டும். அதற்கான தேவையும் அவசியமும் இலங்கை தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இன்று ஏற்பட்டிருக்கின்றது.

### தமிழர் தேசம்

13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் அதன் வரைபின் அடிப்படையிலும் நடைமுறையின் அடிப்படையிலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்தும் வகையில் அமையாமை காரணமாக தமிழ் மக்களின் தரப்புக்களும் தலைமைகளும் காலத்துக்கு காலம் தமக்கான தீர்வு எப்படி அமையவேண்டும் என்று தீர்வுத் திட்டங்களை இலங்கை அரசுக்கும் சர்வதேச சமுகத்துக்கும் முன்வைத்துள்ளனர். அவற்றுள் முக்கியமானவையாக வட மாகாண சபை மற்றும் தமிழ் மக்கள் பேரவை ஆகியவை பொதுமக்களுடன் கலந்தாலோசித்து தீர்வு திட்டங்களை முன்வைத்துள்ளன. இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் இந்த தீர்வு திட்டங்கள் பரிசீலனை செய்யப்படவேண்டும். அத்துடன், எதிர்வரும் காலங்களில், தீர்வுக்கான எந்த முயற்சியும் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதன் அடிப்படையில், அவர்கள் ஒரு தரப்பாக கருதப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். நான் முன்னர் குறிப்பிட்டதுபோல, 13 ஆவது திருத்தச் சட்ட முன்னெடுப்புக்களில் தமிழ் மக்கள் ஒரு தரப்பாகவோ அல்லது அவர்களின் ஆலோசனையோ பெறப்படவில்லை. இந்தியாவைக் கையாள்வதில் முன்னர் போல இலங்கை அரசு பல்வேறு ஏமாற்று வித்தைகளை மேற்கொள்ளும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதற்கு அமைவாக இந்திய மக்களும் அதன் மத்திய மாநில அரசுகளும் செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், என்றார். (ஓ,5)

### பரீட்சைகள் ......

சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் சுகாதார அமைச்சை நாடியுள்ளோம். இவ்வாறு பரீட்சைகள் ஆணையாளர் பீ. சனத் பூஜித நேற்றிரவு 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் நோயாளிகள் சமூக மட்டத்தில் இனங்காணப்பட்டமையை அடுத்து சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் தவணை விடுமுறைக்காகப் பாடசாலைகள் முன்கூட்டியே மூடப்பட்டுள்ளன. எனினும், திட்டமிட்டபடி சகல பரீட்சைகளும் நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஒ,5,22)

### வழி வரைபடம் ......

வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை அவருக்கு தொற்று ஏற்பட்டமைக்கான வழி வரைபடம் தொடர் சங்கிலி கண்டறியப்படவில்லை என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ஒ,5,22)

### தொழிற்சாலை ......

சேர்க்கப்பட்டுள்ளனர். நோய்த்தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதையடுத்தே அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ,5,44)

### 1300 பேருக்கு......

அத்துடன் 75 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

திவுலப்பிட்டிய பெண் பழகிய அதேபோல் அவருடன் தொடர்பை ஏற்படுத்திய 709 இற்கும் மேற்பட்டோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ,5,44)

### கொரோனா......

எம்.பிக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

'கொரோனா' விவகாரம், அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

அதேவேளை, அமைச்சரவைக்கூட்டமும் ஜனாதிபதி தலைமையில் இன்று நடைபெறவுள்ளது. (ஒ,5,44)

### நீண்ட......

திப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர்கள் இருவரும் கொழும்பு தேசிய தொற்று நோயியல் தடுப்பு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அந்தப் பெண்ணின் கணவனுக்கும் ஏனைய மூன்று பிள்ளைகளுக்கும் நேற்றைய பரிசோதனையின்போது கொரோனாத் தொற்று உறுதியாகவில்லை. எனினும், அவர்கள் நால்வரும் கட்டாய சுய

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

காய்ச்சல் காரணமாக கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த பெண், சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்புகையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மூலமே கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனையடுத்து மருத்துவமனைப் பணியாளர்கள் 15 பேர்மற்றும் அவருடன் பணியாற்றும் 400 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் சமூகத்தில் இருந்து கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22,44)

### மாதகலில்.....

பட்டினத்துக்கு சுற்றுலாவில் வந்த நிலையில் அவர்கள், கடற்படையினரின் ஹோட்டலில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஒ,5,26)

### புங்குடுதீவிலும்.....

தொடர்புடைய 20 பேரும் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வேலணை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் புங்குடுதீவைச் சேர்ந்த இரண்டு பெண்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் ஒருவர் கடந்த 30ஆம் திகதி வீடு திரும்பியுள்ளார். அவர் கடந்த 4 நாள்களில் பழகியவர்கள் தொடர்பில் தகவல் பெறப்பட்டு அவர்கள் அனைவரும் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் மற்றைய பெண் நேற்று ஞாயிற்றுக்கிழமை வீடு திரும்பியுள்ளார். அவரது குடும்பத்தினரும் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த இரு பெண்களும், அவர்களுடன் தொடர்புடையவர்களும் என 20 பேர் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்படவுள்ளன. பரி

சோதனை அறிக்கை கிடைத்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும், என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் புங்குடுதீவைச் சேர்ந்த இரு பெண்களும் பஸ்ஸிலேயே ஊருக்கு வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22,26)

### கம்பஹா .....

டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பெண்ணுடன் பணிபுரிந்த 400 பேரின் பெயர்ப் பட்டியலை ஆடைத் தொழிற்சாலை நிறுவனம் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்தது. அந்தப் பட்டியலில் யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்த 7 பெண்களும் உள்ளடங்கியுள்ளனர். அவர்கள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்தது. இதன்போது அவர்கள் கம்பஹா ஆடைத் தொழிற்சாலையிலேயே தொடர்ந்தும் தங்கியுள்ளமை தெரியவந்தது. அங்கு அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்தப் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்படாத ஆனால் அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிந்த வேறு இரண்டு பெண்களே யாழ்ப்பாணத்துக்கு திரும்பியிருந்த நிலையில் அவர்களும் அவர்களுடன் தொடர்புடையவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

### கடைகளில்.....

உள்ளிட்ட வடக்கின் பல இடங்களிலும் இதனை அவதானிக்க முடிந்தது.

மக்களின் இந்த அவசர நடவடிக்கையால் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூ

டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,22,26)

### புலிச்சின்னத்தை.....

அணி ஒன்றின் கொடியில் உறுமும் புலியின் சின்னம் இருந்தமையால் இராணுவத்தினரும் பொலிஸாரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை ஊறணி மைதானத்தில் தொடர் நேற்று ஆரம்பமானது.

புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடியை ஏற்றுவதற்கோ அல்லது காட்சிப்படுத்துவதற்கோ அனுமதிக்க முடியாது என்று பொலிஸாரும் இராணுவத்தினரும் எச்சரித்துள்ளனர். (ஒ,5,26)

### சித்தன்.கேணி.....

நகைகள், 10 ஆயிரம் ரூபா பணம் என்பன நேற்று பகல் திருடப்பட்டுள்ளன.

வீட்டின் உரிமையாளர், குடும்பத்துடன் கோவில் ஒன்றுக்குச் சென்றபோது சம்பவம் இடம்பெற்றுள்ளது. கோவிலுக்கு புறப்பட்ட வீட்டார், வீட்டின் திறப்பை, வெளி வாசலின் மேல் உள்ள சுவாமிப் படத்தட்டில் வைத்துவிட்டுச்சென்ற நிலையில் திருடர்கள் சிரமமின்றி கதவைத் திறந்து திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

மாலைவேளை, வீடு திரும்பிய வீட்டார், வீட்டுக் கதவு திறந்திருப்பதைக் கண்டு சந்தேகத்தில் வீட்டினுள் சென்று பார்த்தபோதே நகைகள் மற்றும் பணம் திருடப்பட்டது தெரிய வந்தது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ப26)

### மீனவரின்.....

தமிழ்நாடு ராமேஸ்வரம் தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கடலில் தவறி வீழ்ந்தார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சடலம் அவருடையதாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ,5,26)

## மரண அறிவித்தல்

திருமதி

## குலோத்துங்கம் அருந்ததி

நல்லூர் மூத்தவிநாயகர் வீதியை நிரந்தர வசிப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ் தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலோத்துங்கம் அருந்ததி நேற்று (04.10.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குலோத்துங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கணநாதன் அவர்களின் அன்புச் சகோதரியும், சுவேந்திரராசா, சயந்தனா, சுகுணாவதி, காலஞ்சென்ற சுரேஸ், மற்றும் ரமேஸ், ரனேஸ் சுரேகா, டினேஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2020) திங்கட்கிழமை எழுதுமட்டுவாழ் தெற்கில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள் சுயந்தனா
துரைராசா (பேபி)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 30 | | 04 |
| 04 | | 10 |
| 1950 | | 2020 |



### ராஜேந்திரம் சிறிகாந்தன்

89, அம்மன் வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ராஜேந்திரம் சிறிகாந்தன் நேற்று (04.10.2020) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராஜேந்திரம் வாலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை ருக்குமணி தம்பதியரின் மருமகனும், லைலாகுமாரியின் அன்புக் கணவரும், அமுதசுரபி, ரஞ்சிர் காந்தன், அமுதசக்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிசுதன், பிரியதர்ஷினி, மதன் ஆகியோரின் மாமனாரும், ரூபகாந்தன், காலஞ்சென்ற சொரூபகாந்தன் மற்றும் சொரூபகாந்தி, இந்திரகாந்தன், சந்திர காந்தி, காலஞ்சென்ற ராஜகாந்தன், கௌரிகாந்தி, காந்தன் ஆகியோரின் மூத்த சகோதரனும், சுசிலாதேவி, ஜெயதேவி, சத்தியேந்திரன், அசோக் லிங்கம், ரதி, சண்முகராஜா, துஷியந்தி, வசந்தா, சிவமலர், செல்வகுமாரி, சந்திரகுமார் ஆகியோரின் மைத்துனரும், தாரூன், நயனிக்கா ஆகியோரின் பேரனும், தனஞ்செயன், கலைஅரசி, கலாதரன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2020) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 663 6365, 021 221 2047

# பஞ்சானது பஞ்சாப்: சென்னை சாதனை



துபாய், ஒக்.05

தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, 10 விக்கெட்டுக்களால் பஞ்சாப் அணியைத் பறக்க விட்டது சென்னை அணி.

செனை சுப்பர்கிங்ஸ் அணியும், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் நேற்று டுபாயில் மோதிக்கொண்டன. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணிமுதலில் துடுப்பெடுத்தாடுவதற்குத் தீர்மானித்தது.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைக் குவித்தது. பஞ்சாப் அணியின் ராகுல் 63 ஓட்டங்களையும்,நிக்கலஸ் பூரன் 33 ஓட்டங்களையும், மயங்க் அகர்வால் 26ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் சென்னை அணியின் தாகூர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்னை அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான ஷேன் வட்சனும் டூ பிளஸிஸும் , பஞ்சாப் அணியின் பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்து விக்கெட் இழப்பின்றி 17.4 ஓவர்கள் நிறைவில் 181 ஓட்டங்களைப் பெற்று சாதனை வெற்றியைப் பதிவு செய்தனர். வட்சன் 83 ஓட்டங்களையும் டூ பிளஸிஸ் 87 ஓட்டங்களையும் பெற்று, ஐ.பி. எல் வரலாற்றில் ஆரம்பத்துடுப்பாட்ட இணை பெற்ற அதிகூடிய ஓட்டங்கள் ( 181 ஓட்டங்கள்) என்ற சாதனையைப் படைத்து 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியைப் பணிய வைத்தனர்.

இந்த வெற்றிமூலம் தொடர்ச்சியாக 3 போட்டிகளில் பெற்ற தொடர் தோல்விக்கு சென்னை அணி முற்றுப்புள்ளி வைத்து மீண்டும் வெற்றிப்பாதைக்குத் திரும்பியுள்ளது. (அ)

## மும்பையிடம் மூக்குடைபட்டது ஹைதராபாத்



சார்ஜா, ஒக்.05

34 ஓட்டங்களினால் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியை இலகுவாகத் தோற்கடித்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கும், ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணிகளுக்கிடையேயான போட்டி நேற்றுப் பிற்பகல் ஆரம்பமானது.

சார்ஜாவில் ஆரம்பமான இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணி சார்பில் டி கொக் 67ஓட்டங்களையும், இஷான் கிஷான் 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் ஹைதராபாத் அணியின் சண்டீப் சர்மா, சித்தார்த் கவுல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

209 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 34 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது.

ஹைதராபாத் அணி சார்பில் ஜோனி பெயர்ஸ்டோ 25 ஓட்டங்களுடனும், டேவிட் வோர்னர் 60 ஓட்டங்களுடனும் மனீஷ் பாண்டே 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மும்பை அணியின் பும்ரா, டிரென்ட் போல்ட், ஜேம்ஸ் பேட்டின்சன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (அ)

பௌதீகவியல்
By.M.கருணாநிதி B.Sc(Hons)
(வளவாளர் NIE, NP)
2021 A/L, 2022 A/L
English & தமிழ் மூலம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
(Science Hall அருகில்)
பெருமாள் கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்
தொடர்பு: 077 618 3064

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்ப பிரிவு 2022
பொறியியல் தொழினுட்பம், உயிர்முறைமைகள் தொழினுட்பம்
புதிய பிரிவு ஆரம்பம்
10.10.2020 காலை 08.00 மணிக்கு
(சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)
AL 2021, 2022 பொறியியல், உயிர்முறைமைகள் தொழினுட்பபிரிவு மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா
கண்டி, நுவரெலியா, ஹட்டன்
October 19,20,21
➜ ஆராய்ச்சி நிலையம்,
➜ பண்ணை (New Zealand Farm),
➜ Tissue Culture Lab,
➜ Automobile lab பார்வையிடப்படும்.
தொடர்புகளுக்கு 077 017 5346, 077 170 3549

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்
அன்பொளி கல்வியகம்
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். இயக்குநர்

## மரண அறிவித்தல்

தோற்றம்: 19 . 12 . 1948



மறைவு: 04 . 10 . 2020

### திருநாவுக்கரசு நீலாம்பிகை

கல்வயலைப் பிறப்பிடமாகவும் சப்பச்சிமாவடி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு நீலாம்பிகை நேற்று (04.10.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், திருஞானச்செல்வி (ஜேர்மன்), திருக்குமார் (சுவிஸ்), திருமாலதி (ஜேர்மன்), திருவேணி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுந்தரராஜா (ஜேர்மன்), கலைச்செல்வி (சுவிஸ்), பஞ்சவர்ணன் (ஜேர்மன்), நகுலேஸ்வரன் (யாழ். ரெக்ஸ்-சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியும், சிந்துஜன், சிவாஜன், அசின், அனாமிகா, விதுர்சன், நகிஷா, நர்த்தனா, நஷ்மியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மல்லிகாதேவி, சந்திரலேகா, சிவரஞ்சினி ஆகியோரின் சகோதரியும், யோகம்மா, மகாலிங்கம், அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2020) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் (சப்பச்சிமாவடி, சாவகச்சேரி) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
(நகுலன்-யாழ்.ரெக்ஸ், சாவகச்சேரி)